Follow us

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 526 சுபகிருது வருடம், வைகாசி மாதம் 09ஆம் திகதி திங்கட்கிழமை (23.05.2022) ஹிஜ்ரி - 1443, ஷவ்வால் - 21, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50



## அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமராக அந்தனி அல்பனீஸ் தெரிவு

11 பக்கம்

## கொழும்பு தொடர்மாடி மக்களுக்கு சமைத்த உணவு வழங்குங்கள்

### பிரதமர் ரணிலிடம் மனோ கணேசன் கோரிக்கை



02 பக்கம்

# 21ஆவது அரசியலமைப்பு திருத்தம் அமைச்சரவைக்கு!

## இன்று சமர்ப்பிக்கிறார் நீதியமைச்சர்: விரைவில் நாடாளுமன்றுக்கு வரும்

யோ.தர்மராஜ்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அதிகாரத்தைக் குறைத்தல் மற்றும் இரட்டைக்குடியுரிமை கொண்டவர்களுக்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்க முடியாது என்பதற்கான 21ஆவது அரசியலமைப்புத் திருத்தம் இன்று (23) அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

02 பக்கம்

## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பம்

### மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் எவரும் செயற்படக்கூடாதென பரீட்சைகள் ஆணையர் கோரிக்கை

யோ.தர்மராஜ்

2021ஆம் ஆண்டுக்காக கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இன்று (23) ஆரம்பமாகின்றது. இம்முறை 5 இலட்சத்து 17 ஆயிரத்து 496 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

02 பக்கம்

# பிரிட்டனால் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் உண்ணாவிரதம்!

02 பக்கம்

## முஸ்லிம் மாணவிகள் முகத்தை மூடி பரீட்சை எழுத முடியாதென அறிவிப்பு

அஷ்ரப் ஏ சமத்

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் முஸ்லிம் மாணவிகள் பர்தா அணிந்து பரீட்சை எழுத அனுமதி வழங்கப்படும் அதேவேளை, முகத்தை மூடி பரீட்சை எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள் என புதிய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பர்தாவை அணிந்து பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்போவதில்லையென சில பிரதேசங்களில் அதிகாரிகள் தெரிவித்திருப்பது தொடர்பாக முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி கல்வி அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவந்தபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



'பெட்ரோல் வரிசையில் நிக்கிற ஆக்களுக்கு சாப்பாடு கொடுக்கிறாங்களாம்... கொஞ்சக் காலத்தில உந்த சாப்பாட்டுக்கும் வரிசையில நிக்க வேண்டிவரும் பாருங்கோ...'

## இலங்கையின் நிலைமை ஏனைய உலக நாடுகளிலும் ஏற்படலாம்!

### சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை



அரசாங்கங்கள் வறிய மக்களுக்கு உதவ முன்வராவிட்டால் இலங்கையின் நிலை உலகின் ஏனைய நாடுகளிலும் உருவாகலாம் என சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் எச்சரித்துள்ளார்.

உணவு, எரிபொருட்களை மானிய விலையில் சமூகத்தின் வறிய மக்களுக்கு அரசாங்கங்கள் வழங்கவேண்டும்,

02 பக்கம்

## ஆஸி. தேர்தலில் இலங்கை பூர்வீக தமிழ்ப் பெண் வெற்றி



அவுஸ்திரேலிய வரலாற்றில் முதன்முறையாக இலங்கை தமிழ் பூர்வீகத்தைக்கொண்ட மிஷேல் ஆனந்தராஜா நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் தெல்லிப்பழையை சேர்ந்த பெற்றோருக்கு தென் ஆபிரிக்காவில் பிறந்து இங்கிலாந்து ஊடாக அவுஸ்திரேலியாவுக்கு வந்தவர்.

02 பக்கம்

### உஷ்



அமைச்சுப் பதவிகளை கேட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பலர் ரணிலுக்கு அழைப்பு எடுத்து வருகின்றனராம்.

அமைச்சுப் பதவிகளை எடுக்கவேண்டாமென கட்சித் தலைவர் மைத்ரிபால சிறிசேன கேட்டுக்கொண்டபோதும் அவற்றை பல எம்.பிக்கள் கணக்கில் எடுக்கவில்லையென தகவல். இதனால் சுதந்திரக் கட்சிக்கு மேலும் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுகளை வழங்க ஆலோசிக்கப்பட்டு வருகிறதாம்.

FUN BLASTER இடமிருந்து

மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்

Facebook WhatsApp மற்றும் YouTube

உடன் மேலதிக டேட்டா*



ரூ.347/- மட்டுமே

மேலதிக வரிகள் இல்லை

செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்

* 1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது

TRC/D/PRO/20/10

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது

4G SIM அட்டையுடன் 4G ஆயசவிழநெ அவசியமாகும்

Dialog

எதிர்காலம் இன்றே.

மக்கள் வங்கி ஊடாக வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி வெற்றியாளர் ஆகுங்கள்




இறுதிச் சீட்டிழுப்பின் வெற்றியாளருக்கு

ரூ.10,000,000/-

மாதாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.1,000,000/- × 11 மாதங்கள்

ரூ.11,000,000/-

வாராந்த வெற்றியாளர்களுக்கு தங்கப் பவுண்

நாளாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.10,000/-

மேலும் மேலும் பணம் அனுப்பி, வெல்லும் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளுங்கள்

செல்லுபடியாகும் காலம் 2022 பெப்ரவரி 01 தொடக்கம் டிசெம்பர் 31 வரை மட்டுமே.

+9477 157 6356

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.peoplesbank.lk

1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK

Pride of the Nation

AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating

People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

## 21ஆவது அரசியலமைப்பு...

ஜனாதிபதிக்கு எதிராகவும் அவருடைய அரசாங்கத்திற்கு எதிராகவும் மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருவதுடன், ஜனாதிபதியையும் பதவி விலகுமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்தநிலையில், ஜனாதிபதி பதவி விலகுவதுடன், தற்போதைய அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட 20ஆவது திருத்தத்தை நீக்கி, 19ஆவது திருத்தத்தை பலப்படுத்துவதற்கான 21 ஆவது திருத்தத்தையும் கொண்டுவர வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

இதற்கமைய, 20ஆவது திருத்தத்தின் ஊடாக பலப்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் இணக்கம் தெரிவித்தனர்.

இதனையடுத்து, புதிய அரசியலமைப்பு திருத்தத்திற்கான வேலைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்ட நிலையில், 21ஆவது திருத்தத்தை கொண்டுவருவதற்கான அனுமதி கோரி இன்று (23) அமைச்சரவையில் குறித்த திருத்த யோசனை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அத்தோடு, 20ஆவது திருத்தத்திலுள்ள இரட்டை குடியுரிமை கொண்டவருக்கு நாடாளுமன்றத்திலும் அமைச்சுப் பதவியையும் வகிக்க முடியும் என்ற சரத்தை நீக்குவதற்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. தற்போது, நீதி அமைச்சராக பதவியேற்றுள்ள அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவினால் இன்று (23) 21ஆவது திருத்தம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதன்படி, 21ஆவது திருத்தத்தில் இரட்டை குடியுரிமை சரத்தை நீக்குவதற்கு அனுமதி கிடைத்தால், தற்போது நாடாளுமன்றத்திலுள்ள பெசில் ராஜபக்ஷவின் எம்.பி. பதவி பறிபோகும் ஆபத்துள்ளது.

ஜனாதிபதி தலைமையிலான ஆட்சியினால் இரட்டை குடியுரிமை கொண்டவர் நாடாளுமன்றத்திற்கு வருவதுடன், அமைச்சு பதவியையும் வகிக்க முடியும் என்ற யோசனை நிறைவேற்றப்பட்டதால், அமெரிக்க குடியுரிமையை கொண்டுள்ள பெசில் ராஜபக்ஷ தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வருவதை தந்ததோடு, நிதி அமைச்சு பதவியையும் வகித்தார்.

இந்த நிலையில், நாட்டில் அவருக்கு கடுமையான எதிர்ப்பிருப்பதால், இரட்டை குடியுரிமை சரத்து நீக்கப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம். அவ்வாறு நடந்தால் பெசில் ராஜபக்ஷவின் எம்.பி. பதவி பறிபோகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம் மாணவிகள்...

பரீட்சைக்குத் தோற்றும் மாணவிகள் மண்டபத்துக்குள் பிரவேசிக்க முன் தலையை மறைத்திருப்பவர்கள் தமது இரு காதுகளையும் திறந்து காட்ட வேண்டும் என்பதுடன் முகத்தை திறந்தே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்றும் கல்வியமைச்சின் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பர்தாவை அகற்றி விட்டே பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார்கள் என வடக்கிலிருந்து சில பெற்றோர் முஸ்லிம் கவுன்சிலின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து, முஸ்லிம் கவுன்சில் முஸ்லிம் அரசியல் தலைமைத்துவத்தின் கவனத்துக்கு இதனைக் கொண்டு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில் ஓர் மாணவி இவ்விடயம் சம்பந்தமாக முஸ்லிம் கவுன்சிலுக்கு கொண்டுவந்ததையடுத்தே இவ்விடயம் உரிய அதிகாரிகள், கல்வியமைச்சர் ஆகியோர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

தமிழன் தமிழன் ஜூனியர்
கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

## பிரிட்டனால்...

பிரிட்டனிற்கு சொந்தமான சாகோஸ் தீவில் உள்ள இராணுவத்தளத்தில் கடந்த ஏழு மாதங்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் அகதிகள் தங்கள் நிலைமையை வெளிப்படுத்துவதற்காக உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

சாகோஸ் தீவில் கடந்த ஏழு மாதங்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ள 89 இலங்கை தமிழ் அகதிகளில் 42 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஒக்டோபரில் தமிழ் நாட்டிலிருந்து கனடா நோக்கி 89 இலங்கை தமிழ் அகதிகளுடன் பயணித்துக்கொண்டிருந்த படகு நடுக்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தவேளை பிரிட்டிஸ் இராணுவத்தினரை அதனை மீட்டு டியோகோ கார்சியாவிற்கு கொண்டு சென்றிருந்தனர்.

அமெரிக்கப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள டியோகோ கார்சியா இராணுவத்தளத்திற்கு இவர்கள் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். முதல் வெளி உலகத்துடனான அவர்களது தொடர்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. முதல் ஆறு வாரங்கள் அவர்களை எவரும் தொடர்புகொள்ள முடியாத நிலை காணப்பட்டது என இலங்கை தமிழ் அகதிகளை பிரதிநிதித்துவம் செய்யும் லேய் டே என்ற பிரிட்டனின் சட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது.

தீவிலிருந்து வெளியே கூடாரம் போன்றவற்றிற்குள் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தாங்கள் சர்வதேச பாதுகாப்பை கோருவதாக அவர்கள் அதிகாரிகளிற்கு தெரியப்படுத்தியுள்ளதாக அறியமுடிகின்றது. ஆனால், அவர்கள் புகலிடக்கோரிக்கையை முன்வைப்பதற்கு உதவும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பிரிட்டனை சேர்ந்த சட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிரிட்டிஸ் நிறுவனமான லேய் டே பிரிட்டனின் வெளிவிவகார செயலாளருக்கும் பி.ஐ.ஓ.டி. ஆணையாளருக்கும் இலங்கை அகதிகள் தொடர்பில் மூன்று கடிதங்களை எழுதியுள்ளதாக தெரிவித்துள்ளது.

தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவது அவர்களிற்கு மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு சட்டங்களின் கீழ் பிரிட்டனிற்கு உள்ள கடப்பாடுகளிற்கு இது முரணான விடயம் என பிரிட்டனின் சட்ட நிறுவனம் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அவர்கள் தொடர்ச்சியாக வெளியுலகுடன் தொடர்புகொள்ள அனுமதி மறுப்பது (அவர்களின் குடும்பத்தவர்கள் – சட்ட ஆலோசகர்களுடன்) சட்டவிரோதமானது எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாங்கள் பிரதிநிதித்துவம் செய்பவர்கள் டியோகோ கார்சியாவில் அவர்கள் அனுபவித்துவரும் விடயங்கள் மற்றும் அவர்களிற்கான தீர்வை கண்டுபிடிப்பதில் முன்னேற்றமின்மை குறித்து அதிகளவு அவநம்பிக்கை அடைந்துள்ளனர் என பிரிட்டனை சேர்ந்த நிறுவனம் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

சர்வதேச பாதுகாப்பை கோருவதற்கு அவர்களிற்கு எப்போது, எங்கு, எவ்வாறு அனுமதி வழங்கப்படும் என்பது குறித்து எந்த தகவலும் வழங்கப்படவில்லை. எவ்வளவு காலம் அங்கு தங்கவைக்கப்படுவார்கள், எங்கு அனுப்பப்படுவார்கள் என்பது குறித்தும் எந்த தகவலும் வழங்கப் படவில்லை.

இலங்கை அகதிகளில் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்கள் பத்து வயதிற்கு உட்பட்ட 20 குழந்தைகள் உள்ளனர் என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றோம். அவர்களில் பலரின் மனோநிலையை மிகவும் அவநம்பிக்கை கொண்டவர்கள் என வர்ணிக்க முடியும் எனவும் பிரிட்டன் நிறுவனம் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளது.

அவர்கள் அவ்வாறான நிலையில் உள்ளனர். தாங்கள் தீவில் இறந்தால் பிரிட்டன் என்ன செய்யும் என அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். சிலர் தாங்கள் உயிரிழந்தால் தங்கள் உடல்களை பிரிட்டிஸ் பிரஜைகளிற்கு வழங்கவேண்டும் என தெரிவித்துள்ளனர் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் தமிழ் புலிகள் என அழைக்கப்படும் தமிழ் பிரிவினைவாத போராளிக் குழுவின் தோல்வியுடன் 2009இல் முடிவிற்கு வந்தது.

எனினும், மனித உரிமை அமைப்புகளும் ஐ.நாவும் துன்புறுத்தல்கள், கண்காணிப்பு, கண்மூடித்தனமாக தடுத்துவைத்தல், தமிழர்களின் நிலங்களை கையகப்படுத்துதல் என்பன கடந்த இரண்டு வருடங்களில் அதிகரித்துள்ளன என தெரிவித்துள்ளது.

சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்கள் 20 குழந்தைகளை உள்ளடக்கிய இந்த பலவீனமான நிலையில் உள்ள குழுவினரை மட்டுப்படுத்தப்பட்ட தொடர்பாடல் கல்வியின்மை, சர்வதேச பாதுகாப்பை தேடுவதற்கான வழிகள் இன்மை போன்றவற்றுடன் தீவில் தடுத்துவைத்திருப்பது பிரிட்டன் செய்யக்கூடிய சரியான விடயமல்ல என லெய்டேயின் திசா கிரகெரி தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட குழுவினர் அதிகளவில் நம்பிக்கையற்றவர்களாக காணப்படுகின்றனர். நாங்கள் அவர்களின் மனோநிலை, உடல்நிலை குறித்து ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம். எந்த தாமதமும் இன்றி நீடித்த தீர்வு கிடைக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஸ் அரசாங்கம் கடந்த ஒக்டோபரில் பலரை மீன்பிடிப் படகிலிருந்து காப்பாற்றி பிரிட்டிஸ் இந்து சமுத்திரப் பகுதியொன்றுக்கு கொண்டு சென்றுள்ளது. தற்போதைய நிலைக்கு முடிவினைகாண நாங்கள் அயராது பாடுபடுகின்றோம்.

அவர்களின் பாதுகாப்பும் நலனும் எப்போதும் எங்களின் முன்னுரிமைக்குரிய விடயங்களாக உள்ளன. 24 மணிநேர மருத்துவ உதவி போன்றவற்றை வழங்கியுள்ளோம் என பிரிட்டிஸ் அரசாங்க பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

டியோகோ கார்சியா என்பது சாகோஸ் தீவுகளின் ஒரு பகுதி. 1968இல் மொரீசியஸுக்கு சுதந்திரம் வழங்கியவேளை பிரிட்டன் மொரீசியஸிடமிருந்து சட்டவிரோதமாக இந்தப் பகுதியை பிரித்தது என ஐ.நா. தீர்ப்பு வழங்கியுள்ளது.

பிரிட்டன் இதனை பிரிட்டன் இந்து சமுத்திரப்பகுதி என தெரிவித்துவருவதுடன் திருப்பிக் கொடுக்க மறுத்துவருகின்றது.

## ஆஸி.தேர்தலில்...

இவரின் பூர்வீகம், குடும்ப விபரம் என்பன தேர்தல் முடியும் வரை மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தாலும் பல பத்திரிகைகள் இவரின் பெயரை வைத்து இவர் ஓர் இந்தியர் என்று கூறி வந்தன.

இவர் ஒரு மருத்துவராகவும் மருத்துவ ஆராய்ச்சியாளராகவும் கடமை புரிந்து வந்துள்ளார்.

## இலங்கையின் நிலைமை...

அரசாங்கங்களின் உரிய ஆதரவு இல்லாவிட்டால் இலங்கையின் நிலை ஏனைய நாடுகளிலும் உருவாகலாம் என கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார். மேலும், உலகம் முழுவதும் வாழ்க்கை செலவு அதிகரிப்பால் மக்கள் நெருக்கடியில் சிக்குண்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களிற்கு அவசியமான உதவிகளை மிகவும் தெரிவுசெய்யப்பட்ட முறையில் வழங்கவேண்டும், மானியங்களை மக்களிற்கு நேரடியாக வழங்கவேண்டும்.

வாழ்க்கைச் செலவு தொடர்பில் இரண்டு முன்னுரிமைகள் குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர், ஒன்று சமூகத்தின் வறிய மக்கள் – அவர்களே உணவு, எரிபொருள் விலை அதிகரிப்பினால் தற்போது நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

இரண்டாவது முன்னுரிமை உக்ரைன் யுத்தத்தினால் மோசமாக பாதிக்கப்பட்ட வர்த்தகங்களிற்கு வழங்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## கொழும்பு தொடர்மாடி...

உணவு இல்லை. கேஸ் இல்லை. மின்சாரம் இல்லை. இவற்றால் நாட்டிலேயே மிகவும் துன்புறுவது கொழும்பு தொடர்மாடி குடியிருப்புகளில் வாழும் மக்கள்தான். மாநகரத்தில் நாளாந்த வருமானம் பெற்று வந்த குடும்பங்கள், ஒருவேளை உணவின்றியும், உணவு சமைக்க வழியின்றியும் தவிக்கிறார்கள்.

குறிப்பாக, வடகொழும்பின் பின்தங்கிய நகர தோட்ட குடியிருப்புகளில் வாழ்ந்த மக்கள், எமது ஆட்சிகாலத்தில் சுமார் 13,000 தொடர்மாடி இல்லங்களில் குடியமர்த்தப்பட்டார்கள். இந்த குடும்பங்களை அடையாளம் கண்டு, இவர்களுக்கும், கொழும்பு நகரின் பின்தங்கிய குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கும், பங்கீட்டு அட்டைகள் வழங்கி, அவர்களுக்கு சமைத்த உணவை வழங்குங்கள்.

இதற்காக, கொழும்பு துறைமுகத்தில் அமைந்துள்ள பாரிய சமையலறை மற்றும் கொழும்பு மாநகரசபைக்கு சொந்தமான பயன்படுத்தப்படாத சமையலறைகள் ஆகியவற்றை பயன்படுத்தலாம். இராணுவ சமையல் பணியாளர்களை பணியில் அமர்த்தி இயல்பு நிலைமை திரும்பும்வரை இந்த திட்டத்தை முன்னெடுங்கள் என பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் கொழும்பு எம்.பியுமான மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் பிரதமருக்கு கடிதம் அனுப்பியுள்ள மனோ எம்.பி., ஊடகங்களிடம் மேலும் கூறியுள்ளதாவது,

நாடு முழுவதும் வாழ்வாதாரப் பிரச்சினைகள், மக்களின் கழுத்துகளை நெரிக்கின்றன. இவற்றில் மிகவும் துன்பங்களை நகரங்களில் வாழும் குடும்பங்கள் சந்திக்கிறார்கள். கிராமிய பகுதிகளில் இருக்கும் இயற்கை வளங்கள், மரம், செடி, கொடி, தண்ணீர் என்பன நகரங்களில் இல்லை. ஒரு கிண்ணம் நீரையும் பணம் கொடுத்தே வாங்க வேண்டியுள்ளது. அதிலும் கொழும்பு தொடர்மாடி குடியிருப்புகளில் வாழும் மக்கள் படும்பாடு சொல்லும்தரமன்று.

இந்த கொழும்பு மாநகர பின்தங்கிய மக்களை, விசேட தேவையுள்ள பிரிவினராக அறிவித்து, பங்கீட்டு குடும்ப அட்டைகளை வழங்கி அவர்களுக்கு முதற்கட்டமாக சமைத்த உணவு வழங்குங்கள். இதன்மூலம் இங்கு வாழும் பள்ளிப் பிள்ளைகள், குழந்தைகள், பெண்கள், வயோதிபர்களின் பசியை ஓரளவாவது போக்கலாம்.

மீண்டும் நாட்டில் இயல்பு நிலைமை திரும்பும்வரை இந்தத் திட்டத்தை நடைமுறை செய்யுங்கள்.

கொழும்பு மாவட்ட எம்.பி. என்ற முறையில், எதிரணியில் இருந்தபடி கட்சி பேதமின்றி, இது தொடர்பில் நாம் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க தயார் என்றார்.

## க.பொ.த. சாதாரண...

இன்று (23) ஆரம்பமாகும் சாதாரண தரப் பரீட்சை 3 ஆயிரத்து 844 நிலையங்களில் இடம்பெறவுள்ளது.

வருட இறுதியில் டிசம்பர் மாதத்தில் இடம்பெறும் சாதாரண தரப் பரீட்சையானது, கடந்த வருடத்தில் காணப்பட்ட கொரோனா தொற்று நிலைமையால் இவ் வருடம் மார்ச் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டது. மேலும், மாணவர்கள் கற்பதற்கு தேவையான போதுமான காலப்பகுதி இன்மையால் இப் பரீட்சை மே மாத இறுதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை இன்று (23) ஆரம்பமாவதுடன், எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை, 3 ஆயிரத்து 844 பரீட்சை நிலையங்களிலும், 542 இணைப்பு மத்திய நிலையங்களிலும் நடைபெறவுள்ளது.

அதன்படி, இம்முறை பரீட்சைக்கு 4 இலட்சத்து 17 ஆயிரத்து 129 பாடசாலை பரீட்சார்த்திகளும், 11 ஆயிரத்து 367 தனியார் பரீட்சார்த்திகளும் அடங்கலாக 5 இலட்சத்து 17 ஆயிரத்து 496 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இதேவேளை, இம்முறை பரீட்சைக்கு 590 விசேட தேவையுடைய பரீட்சார்த்திகளுக்காக விசேட பரீட்சை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ள பரீட்சார்த்திகளுக்காக பரீட்சை இடம்பெறும் நிலையங்களில் தனி அறைகளும் ஒதுக்கப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

### பரீட்சை நிலையங்கள் தயார்

சாதாரண தரப் பரீட்சைக்கான பரீட்சை நிலையங்கள் தயார் நிலையில் உள்ளதுடன், பரீட்சை நிலையங்களை சுற்றி நேற்று (22) டெங்கு ஒழிப்புக்காக மலத்தீன் புகைகளும் விசிறப்பட்டன.

### பரீட்சார்த்திகளுக்கான போக்குவரத்து

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு மத்தியில் பரீட்சார்த்திகளும் பரீட்சை நிலைய அதிகாரிகளும் எவ்வித தடையுமின்றி சென்று வருவதற்காக விசேட போக்குவரத்துகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதன்படி, இலங்கை போக்குவரத்து சபையின் ஊடாக தங்களுடைய தனிப்பட்ட வாகனங்களுக்கு தேவையான டீசலை பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும், வரிசைகளில் காத்திருக்காது தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்ள மக்களும் உதவுமாறு பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, பரீட்சை நேர அட்டவணைக்கு ஏற்றவாறு தனியார் பஸ்களும் போக்குவரத்தில் ஈடுபடவுள்ளன. அவற்றுக்கு தேவையான எரிபொருளையும் இலங்கை போக்குவரத்து சபையின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

### பெற்றோரின் கோரிக்கை

பரீட்சைகளுக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் 2020 ஆம் ஆண்டு முதல் நீண்ட விடுமுறை உள்ளிட்ட பல நெருக்கடிகளால் உரிய முறையில் பரீட்சைக்கு தயாராக முடியவில்லை. இதனால், அவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

இந்த நிலையில், இன்று முதல் அவர்கள் பரீட்சைக்குச் சென்று மீண்டும் எவ்வித தடையுமின்றி வீடுகளுக்கு திரும்புவதற்கு மக்கள் பெரும் உதவிகளை செய்ய வேண்டும். தயவு செய்து பாதைகளை மறித்து அவர்களுக்கு மேலும் தடைகளை ஏற்படுத்தாது, அமைதியான முறையில் அடுத்த 10 நாட்களும் நடத்துகொள்ளுமாறு முழு நாட்டு மக்களிடமும் கோரிக்கை விடுக்கின்றோம்.

இதேவேளை, பாதைகளை மறித்து போராட்டங்களை நடத்துவதற்கு அரசாங்கமும் இடமளிக்க வேண்டாம். எனவே, பரீட்சைக்கு செல்லும் தங்களுடைய பிள்ளைகள் எவ்வித தடையுமின்றி சென்று வீடு திரும்பும் வரை பாதைகளை மறித்து, போராட்டங்களை நடத்த வேண்டாம் என பொது மக்களிடமும் இளைஞர் யுவதிகளையும் கைக்கூப்பி கேட்டுக்கொள்கின்றோம்.

### பரீட்சை திணைக்கள ஆணையாளர்

பரீட்சைக்கு தோற்றும் அனைத்து பரீட்சார்த்திகளும் விரைவாக வீடுகளிலிருந்து புறப்படுங்கள். நாட்டில் தற்போதுள்ள நிலைமையில் எங்களுக்கு ஏற்றவாறு எதனையும் செய்துகொள்ள முடியாது. எனவே, பரீட்சை நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் கண்காணிப்பாளர்களும் முன்னரை விட இம் முறை விரைவாகவே பரீட்சை நிலையங்களுக்கு வருகை தந்து தங்களுடைய கடமைகளை ஆரம்பிப்பர். இதேவேளை, பாதைகளில் பரீட்சார்த்திகள் இருப்பார்களாயின் அவ் வழியே தங்களுடைய தனிப்பட்ட வாகனத்தில் செல்வோர், அவர்களை பரீட்சை நிலையங்கள் வரை அழைத்துச் செல்வது அவர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும். அதேபோன்று, எதிர்வரும் 10 நாட்களுக்கு, மாணவர்கள் காலையில் பரீட்சை நிலையத்திற்கு வரும் போதும் பரீட்சை முடிந்து வீடு செல்லும்போதும் மக்கள் பாதைகளை மறித்து போராட்டங்களை முன்னெடுக்காதீர்கள்.

ஒருவேளை, பாதைகள் மறிப்பதால் 2 – 3 மணித்தியாலங்களுக்கு பாதையிலேயே இருக்க வேண்டி வந்தால் பரீட்சார்த்திகள் மேலும் பாதிக்கப்படலாம். எனவே, தயவு செய்து மாணவர்களுக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்த வேண்டாம் - என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.



# இந்திய மனிதாபிமான உதவித்திட்டத்துடன் தமிழகத்திலிருந்து கப்பல் கொழும்பு வருகை










இந்திய மக்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட இரண்டு பில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான பாரியதொரு மனிதாபிமான உதவித்தொகுதி நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. அதில் 9 ஆயிரம் மெட்ரிக்தொன் அரிசி, 50 மெட்ரிக்தொன் பால்மா மற்றும் 25 மெட்ரிக் தொன்னுக்கும் அதிகமான மருந்து வகைகளும் ஏனைய மருத்துவப் பொருட்களும் உள்ளடங்கிய இத்தொகுதி, இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவால் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவிடம் கையளிக்கப்பட்டது.

2022 மே 18ஆம் திகதி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த உதவிப்பொருட்களை சென்னை துறைமுகத்திலிருந்து கொடியசைத்து வழியனுப்பிவைத்தார். தமிழக அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் 40 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி, 500 மெட்ரிக்தொன் பால்மா மற்றும் மருந்துப்பொருட்கள் அடங்கிய பாரிய உதவித் திட்டத்தின் கீழ் இது முதற்தொகுதியாக அனுப்பிவைக்கப்படுகின்றது. அத்துடன் இந்த பங்களிப்பானது 5.5 பில்லியன் இலங்கை ரூபாவிற்கும் அதிக பெறுமதியானதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் இத்தொகுதி உதவிப்பொருட்கள் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் மேல் மாகாணங்கள் உள்ளடங்கிய நாடளாவிய ரீதியிலுள்ள பயனாளர்களுக்கு இலங்கை அரசாங்கத்தால் விநியோகிக்கப்படும். அத்துடன், சமூகத்தில் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த பயனாளிகளுக்கு இந்த உதவிப் பொருட்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பில் இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையிலுள்ள தமது சகோதர உறவுகளுடன் துணைநின்று, இந்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் பன்முக முயற்சிகளை பூரணப்படுத்துவதாக இந்திய மக்களிடமிருந்து வழங்கப்படும் இந்த உதவி அமைகின்றது. பல்வேறு அவசர தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக இந்தியாவிலுள்ள தனியார் மற்றும் சமூக அமைப்புகள் பல தமது உதவிகளை இலங்கைக்கு அனுப்பியுள்ளன. இலங்கைக்காக இந்திய மக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் அபரிமிதமான இந்த ஆதரவு, இவ்வருடம் ஜனவரிமுதல் இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கும் 3.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருளாதார உதவிக்கு மேலதிகமாக அமைகின்றது. அத்துடன் இதற்கு மேலதிகமாக மருந்துப்பொருட்கள், உலருணவு நிவாரணங்கள் போன்றவை இந்திய அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது எனத் தெரிவித்துள்ளது.

## வவுனியாவில் எரிபொருள் இன்மையால் அரச உத்தியோகத்தர்கள் அவதி

**(வவுனியா செய்தியாளர்)**

வவுனியாவில் பெற் றோலைப் பெற்றுக்கொள்ள முடியாது அரச உத்தியோகத் தர்கள் அவதிக்குள்ளாகி யுள்ளனர். இதனால் பலரும் கடமைக்கு உரிய நேரத்தில் சமூகமளிக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

பெற்றோலுக்கு கடந்த சில தினங்களாக தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனையடுத்து அத்தியாவசிய தேவைகளை கருத்திற்கொண்டு அரச உத்தியோகத்தர்களுக்கான கடமைக்கான அழைப்பு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், வவுனியா, மாவட்ட செயலகம் அருகிலுள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுக் காலைமுதல் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது. கடமைக்குச் சென்ற கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தாதியர்கள், மருத்துவ மாதுக்கள் என பல அரச உத்தியோகத்தர்கள் கடமைக்கு செல்வதற்காக தமது மோட்டர்சைக்கிள்களுக்கு எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக காத்திருந்தனர். இதன்போது அரச உத்தியோகர்தர்களுக்கென ஒரு வரிசையும், ஏனையவர்களுக்கு மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி உள்ளிட்ட வாகனங்கள் என இரு வரிசையும் சென்றன.

மதியத்திற்கு பின்னர் பொதுமக்களுக்கான வரிசையில் நீண்டநேரமாக வரிசையில் நின்றோருக்கும், அரச உத்தியோகத்தர்களுக்கும்



இடையில் முரண்பாடு ஏற்பட்டது. அவர்களுக்கு தனியான வரிசை வழங்க முடியாதென தர்க்கம் ஏற்பட்டிருந்தது.

இதனால் அரச உத்தியோகத்தர்கள்பலர் பெற்றோல் இன்றி அவர்களுக்கான வரிசையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அங்கு நின்றவர்களின் செயற்பட்டால் பெண் அரச உத்தியோகத் தர்கள் பலரும் மனஉளைச்சலுக்கு உள்ளாகியிருந்ததுடன் திரும்பிச் சென்றிருந்தனர்.

எனவே, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அரச உத்தியோகத்தர்களுக்கென ஒரு ஏற்பாட்டை செய்து தர வேண்டும் எனவும் பாதிக்கப்பட்டவர் கள் கோரியுள்ளனர்.

அத்துடன், அத்தியாவசிய தேவைக்கென குறிப்பிட்ட சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் வழங்கப்படுகின்ற போதும் அங்கு கடமைக்கு செல்லும் அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் எரிபொருள் விநியோகம் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியையை மிரட்டி கப்பம் கோரியவர் கைது

**(கெலும் குணதிலக்க)**

ஆசிரியை ஒருவரை மிரட்டி 50 ஆயிரம் ரூபா கப்பம் கோரிய நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதாக ஒக்கம் பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர். ஒக்கம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேவகனத்தவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மஹியங்கனை பகுதி பாடசாலையொன்றில் கடமையாற்றும் ஆசிரியையிடம் நபர் ஒருவர் தொலைபேசி அழைப்பெடுத்து ஆசிரியையும் அவரது சகோதரரையும் கொலைசெய்வதாக மிரட்டியுள்ளார். தொடர்ச்சியாக இவ்வாறு அழைப்பு வந்துள்ளது.கொலைசெய்யாமல் இருக்க வேண்டு மானால் தனக்கு 50 ஆயிரம் பணம் வேண்டுமெனவும் அந்நபர் ஆசிரியையிடம் கூறியுள்ளார். இது தொடர்பில் அந்த ஆசிரியை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிஸாரின் அறிவுறுத்தலின்படி அந்த நபருக்கு அழைப்பெடுத்த ஆசிரியை, 50 ஆயிரம் பணம் தருவதாகவும் அதனைப் பெற்றுக் கொள்ளும்படியும் தெரிவித் துள்ளார்.இந்நிலையில், ஆசிரியையை சந்திக்க வந்த நபர் 50 ஆயிரம் பணத்தைப் பெற்றுக்கொள்ளும்போது மறைந்திருந்த பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## எரிபொருளை களஞ்சியப்படுத்தினால் சட்ட நடவடிக்கை

எரிபொருளை முறையற்ற வகையில் களஞ்சியப் படுத்துபவர்களைக் கண்டு பிடிப்பதற்கான சுற்றிவளைப்பு நட வடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.அவ்வாறு களஞ்சியப் படுத்துபவர் களை கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைக்கான பணிகளில் ஈடுபடுபவர்கள் எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு விசேட வேலைத்திட்டம் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.















இலங்கை சுற்றலாப் பயணிகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட வீதி பேரணி நேற்று (22) விகாரமகாதேவி பூங்காவுக்கு அருகில் ஆரம்பிக்கப்பட்ட போது (படப்பிடிப்பு: கிரிஷான் காரியவசம்)

## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

குருநாகல், மாவத்தகம, பரகஹதெனிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பரகஹதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்திற்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படாத நிலையில், மேலதிக விசாரணைகளை மாவத்தகம பொலிஸார் மேற்கொண்டுவருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் வீட்டுக்கு தீவைப்பு

### கெக்கிராவவில் சம்பவம்

கெக்கிராவ, இப்பலோகம, திலக்கபுர பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் ஒருவரின் வீட்டிற்கு சிலரால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இப்பலோகம பகுதியிலுள்ள அவருக்கு சொந்தமான எரிபொருள் நிலையத்தில், எரிபொருள் கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்தில் குறித்த வீட்டிற்கு தீ வைத்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகித்துள்ளனர்.

தீ வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் எரிபொருள் நிலைய உரிமையாளரின் மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் வீட்டினுள் இருந்துள்ளனர்.

எனினும், பிரதேசவாசிகள் மற்றும் பொலிஸார் இணைந்து அவர்களை பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

குறித்த பிள்ளைகளில் ஒருவர், நாளை ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதுடன், அவரின் பாடசாலை உபகரணங்கள் தீயில் எரிந்துள்ளதாகவும், வீட்டிற்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 50,000 டொலர் அமெரிக்க டொலருடன் நபரொருவர் கைது

ராஜகிரிய பிரதேசத்தில் 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களுடன் நபரொருவர் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

இவர், ராஜகிரிய பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையமொன்றில் வைத்து நேற்று முன்தினம் (21) கைதுசெய்யப்பட்டுள்ளதாக வெலிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருதாவது,

சந்தேகநபரிடமிருந்த பையை சோதனை செய்தபோது அதிலிருந்து 100 அமெரிக்க டொலர் பெறுமதியான 500 நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி 50 ஆயிரம் டொலர் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். ஹட்டன் பிரதேசத்தைச் சேரந்த 36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள் ளார்.

இருந்தபோதிலும், சந்தேகநபர் அளுத் மாவத்தை, கொழும்பு 15 பிரதேசத்தில் தற்காலிகமாக தங்கியிருந்த நபர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அவரிடமிருந்து கார் மற்றும் இரு கைபேசிகள் என்பன பொலிஸாரினால் கைபற்றப்பட்டுள்ளன.

தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2022, மே 23ஆம் திகதி, திங்கட்கிழமை**

# மக்கள் முன்னுள்ள பொறுப்பு!

நாட்டின் எல்லா இடங்களிலும் தினசரி ஆர்ப்பாட்டங்களும், மக்கள் போராட்டங்களும் தீவிரமாக இடம்பெற்றுவருகின்றன.

எரிபொருளுக்காகவும், சமையல் எரிவாயுவுக்காகவும் நீண்ட வரிசைகள் காணப்படுகின்றன. சீரற்ற கொள்கைகளினால் நாட்டை கடித்துக் குதறிய கடந்த ராஜபக்ஷ ஆட்சியாளர்களிடம் ஆட்சியை பொறுப்பேற்றுள்ள ரணில் விக்ரமசிங்க ஒரே இரவில் பிரச்சினையை தீர்த்துவிடும் சக்தியை கொண்டவரல்ல. அப்படியொரு அமானுஷ்ய சக்தி அவரிடம் இருக்குமென மக்களும் எதிர்பார்க்க முடியாது.

ஆனாலும் பிரதமர் ரணிலின் அறிவிப்புகள், செயற்பாடுகள், இந்த நெருக்கடியிலிருந்து நிச்சயம் மீள முடியும் என்ற நம்பிக்கையைத் தருகின்றன. பேரழிவை ஏற்படுத்தும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளவேளை, பிரதமர் ரணில் விக்ரமசிங்க உணவுப் பற்றாக்குறை குறித்து எச்சரித்துள்ளதுடன், உணவுப்பொருட்களின் விளைச்சலை அதிகரிப்பதற்காக தனது அரசாங்கம் அடுத்த பருவத்திற்கு போதியளவு உரங்களை கொள்வனவுசெய்யும் என உறுதியளித்துள்ளார்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இரசாயன உரங்களை தடைசெய்வது என்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முடிவு விளைச்சலை பாதித்தது. அரசாங்கம் அந்த முடிவை கைவிட்டுள்ளபோதிலும் குறிப்பிடத்தக்க உர இறக்குமதி இன்னமும் இடம்பெறவில்லை.

இந்த பருவகாலத்திற்கு உரங்களை பெறுவதற்கான நேரமில்லை என தெரிவித்துள்ள பிரதமர், அடுத்த பருவகாலத்தில் (செப்டெம்பர், மார்ச்) போதியளவு உரங்கள் காணப்படுவதை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

தற்போதைய நிலைமையின் பாரதூர தன்மையை அனைவரும் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ளவேண்டும் என நேர்மையாக வேண்டுகோள் விடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சுற்றுலாத்துறையை நம்பியுள்ள இலங்கை, பாரிய அந்நிய செலாவணி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

பொருளாதார நடவடிக்கைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன. அடுத்த இரண்டு மாதங்களில் நிலைமை எப்படி இருக்கும் என்பதை எதிர்வுகூற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

உலக வங்கியிடமிருந்து அந்நிய செலாவணி பெறப்பட்டுள்ளது, எரிபொருள் சமையல் எரிவாயு கப்பலிற்கு செலுத்துவதற்கான டொலரும் பெறப்பட்டுள்ளது என வியாழக்கிழமை மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்தார்.

ஆனால் இன்னமும் சீரான விநியோகம் இடம்பெறவில்லை.

நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கு அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் செயற்பாடுகள் நடக்கின்றனவா என்ற சந்தேகம் எழுகின்றது.

வெலிகமவில் டீசல் ஏற்றிச்சென்ற பௌசர் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. மற்றுமொரு இடத்திற்கு சென்ற எரிபொருள் பௌசர் மறிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான இடங்களில் பாதுகாப்புத் தரப்பினரின் உதவியுடன் சிலர் அத்தியாவசிய தேவைகள் எனக்கூறி எரிபொருள் பெற்றுச்செல்லும் கைங்கரியமும் அரங்கேறுகிறது.

எரிபொருள் இல்லாமலும் சமையல் எரிவாயு தட்டுப்பாட்டாலும் மக்கள் படும் அவதி புரிகின்றது. அதற்காக சட்டத்தை மக்கள் தங்கள் கைகளில் எடுப்பது முறையானதல்ல. பல இடங்களில் வீதிகளை மறித்து மக்கள் போராட்டம் நடத்துவதால் மக்களே பாதிக்கப்படுகின்றனர். பொருளாதார நெருக்கடியினால் சிக்கித்தவிக்கும் மக்கள், பலமணிநேரம் காத்திருந்து தங்களிடம் இருக்கும் பணத்தைக்கொண்டு எரிபொருளை நிரப்பி போக்குவரத்தில் ஈடுபடும்போது, வீதிகளை மூடினால் அவர்கள் மாற்றுவழிகளை பயன்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அல்லது நீண்டநேரம் வாகன நெரிசலில் காத்திருக்கவேண்டிய தேவை உள்ளது. அப்படியானால் மக்களின் இந்த வீதிமறிப்புப் போராட்டத்தினால் பாதிக்கப்படுவது மக்கள் தானே? இப்படிச் செய்வதன் மூலம் அரசியல்வாதிகளுக்கு அழுத்தங்களை வழங்கமுடியுமா? இப்படியான வீதிமறிப்புப் போராட்டங்களால் அவசர மருத்துவ தேவைகள், அத்தியாவசிய தேவைகளுக்காக செல்வோர் பாதிக்கப்படுகின்றனர் என்பதை உணர மறுப்பது ஏன்?

நாட்டின் எல்லா இடங்களிலும் அத்தியாவசிய சேவைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் மக்கள் போராட்டங்கள் நடக்குமாயின், அதன் பின்னால் ஏதோவொரு அரசியல் சக்தி இருக்கிறதென்பதை இலகுவில் ஊகிக்க முடிகிறது. வீதிகளை மறித்துப் போராடுவதால், பொது அத்தியாவசிய சேவைகளுக்கு இடையூறு ஏற்படுத்தினால் எரிபொருளோ அல்லது சமையல் எரிவாயுவோ கிடைத்துவிடும் என்று யாரும் நினைக்கலாமா? எரிபொருள், சமையல் எரிவாயு பெற டொலர் நெருக்கடி இருக்கிறது. அப்படியே டொலர் செலுத்தப்பட்டாலும் துறைமுகத்திலிருந்து வெளியே வந்த அத்தியாவசியப் பொருட்களை பதுக்கும் நிலைமையும் இருக்கிறது. கடந்த ஒருவாரகாலமாக நடக்கும் வீதிமறிப்புப் போராட்டங்களால் இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டதென்பதை எத்தனை பேர் அறிவார்கள் ?

எரிபொருள் மற்றும் விநியோகத்தை சீர்செய்ய அரசாங்கம் முழு அளவில் முயற்சிகளை எடுத்துவருகிறது. மக்கள் இக்கட்டான நிலையில் இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்தவிடயம் என்றாலும் இப்போதுள்ள நிலைமையை பயன்படுத்தி அரசியல் செய்யும் சக்திகளிடம் சிக்கிவிடாதிருக்கும் பெரும் பொறுப்பு மக்கள் முன் உள்ளது.

எரிபொருள் பிரச்சினையால் அரசாங்க பணியாளர்கள் வருகை அரச அலுவலகங்களில் வரையறுக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் இயங்கவேண்டிய கட்டாய நிலை. குறிப்பாக, வைத்தியசாலைகள், பொதுப் போக்குவரத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டிய சூழ்நிலை. எனவே, மக்கள் நிலைமையை உணர்ந்து மிகவும் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டுமென்பதை வலியுறுத்திக் கூறவிரும்புகிறோம்.

# ராஜபக்ஷ பதவி விலகுவது மாத்திரமல்ல பொறுப்புக்கூறலுக்கும் பதிலளிக்கவேண்டும்!

இலங்கையின் புதிய பிரதமர் ஒருவர் கடந்தவாரம் பதவியேற்றுக் கொண்டார். ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான ரணில் விக்ரமசிங்க அவரது நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான கால அரசியல் வாழ்வில் ஏற்கனவே பிரதமர் பதவியை பல தடவைகள் வகித்திருக்கிறார்.

இலங்கை சுதந்திரத்துக்குப் பின்னரான அதன் வரலாற்றில் முன்னென்றுமே கண்டிராத பாரதூரமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டை நிலைப்படுத்துவதற்குரிய ஒரு நபராகவே அவரை நாடாளுமன்றம் நினைக்கிறது என்பது தெளிவானது. ஆனால், அபகீர்த்திக்குள்ளாகியிருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்களினால் திரும்பத்திரும்ப முன்வைக்கப்படுகின்ற முக்கியமான கோரிக்கைக்கு இணங்காமல் இது வெறுமனே ஆட்களை மாற்றுகின்ற ஒரு விளையாட்டாகவே இருக்கிறது.

கொழும்பு ஒரு தீப்பற்று பெட்டியாக காணப்படுகிறது. நாடு வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டது. பொருட்களுக்கு பாரதூரமான தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் நிலையில், மனிதாபிமான நெருக்கடியொன்று மூண்டுகொண்டிருக்கிறது. மக்களின் அன்றாட வாழ்வு அத்தியாவசியப் பொருட்களுக்காக நீண்ட வரிசைகளில் காத்துநிற்பதிலேயே கழிவதால் எந்த நிமிடத்திலும் தன்னியல்பான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறக்கூடிய சூழ்நிலையே காணப்படுகிறது. இலட்சக் கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்ற அதேவேளை, பொது வேலைநிறுத்தங்கள் அடிக்கடி நாட்டை முடக்குகின்றன.
70 வருட காலத்தில் ஏற்பட்டிருக்கும் மோசமான பொருளாதார நெருக்கடிக்கு ஜனாதிபதி ராஜபக்ஷவின் குழப்பகரமான தீய ஆட்சியே முற்றிலும் பொறுப்பு என்று மக்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். அவர் பதவி விலகவேண்டும் என்று மாதக்கணக்காக விடுக்கப்பட்டு வருகின்ற கோரிக்கைகள் செவிடன் காதில் ஊதிய சங்காயின. அதனால் பெரும் முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டிருக்கிறது.

அவரின் சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து அண்மை யில் விலகினார். ஆனால், அது ஆர்ப்பாட்டக் காரர்களை பெரிதாக அமைதிப்படுத்தவில்லை. அவர் பதவியிலிருந்து விலகியபோது இறுதியாக நடந்துகொண்ட விதம் இன்றைய நெருக்கடிக்கு வழிவகுத்த நடத்தைகளை அம்பலப்படுத்தி நிற்கிறது. பதவி விலகவேண்டும் என்றுகோரி நடைபெற்று வந்த மாதக் கணக்கான ஆர்ப்பாட்டங்களை அலட்சியம் செய்த அவர் தனது உத்தியோக பூர்வ வாசஸ் தலமான அலரி மாளிகை முன்பாகவும் காலி முகத்திடலிலும் அடாவடித் தனத்துக்கு காரண மானார். இறுதியில் அவர் நாட்டின் இன் னொரு அந்தலையில் இருக்கும் இராணுவ முகாமில் தஞ்சமடைய வேண்டியேற்பட்டது. அவர் நாட்டைவிட்டு வெளியேற முடியாத வாறு நீதிமன்றம் தடை யுத்தரவைப் பிறப்பித் திருக்கிறது. ஐக்கிய அரசாங்கம் ஒன்று அமைக் கப்படுவதற்காக வழிவிடுவதற்காகவே தான் பதவியிலிருந்து விலகியதாகக் கூறும் அவர், நாட்டில் பயங்கர மான முரண்பாடுகளை விதைத்துவிட்டே சென்றார்.

முன்னாள் பிரதமர் நேரடியாக வன் முறைக்கு அழைப்பு விடுக்கவில்லை என்ற போதிலும், அவரது சகபாடிகளும் உதவி யாளர்களும் பஸ்களில் குண்டர்களை ஏற்றி வந்து ஆத்திரமூட்டும் உரைகளை நிகழ்த்தினர். அது அந்தக் குண்டர்கள் அமைதிவழி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொல்லுகளாலும் இரும்புக்கம்பிகளாலும் தாக்குதல் நடத்தத் தூண்டியது. இதையடுத்து எதிரணிக்குழுக்கள் உடனடியாகவே பதிலடி
கொடுக்க ஆரம்பித்தன. பஸ்கள் தலைகீழாக புரட்டிவிடப்பட்டன. அரசாங்க சார்பு அரசியல்வாதிகளின் சொத்துகள் தீ வைக்கப்பட்டன. ஒன்பது பேர் கொல்லப் பட்டதுடன், 200இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். நாடளாவிய ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு கலவரம் விளைவிப்பவர்களை கண்ட இடத்தில் சுடுவதற்கு துருப்புகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதையடுத்து அடுத்துவந்த நாட்களில் அமைதி திரும்பியது.

உணவு வகைகள், எரிபொருட்கள் மற்றும் மருந்துவகைகளின் விலைகள் நினைத்துப் பார்க்கமுடியாத அளவுக்கு உயர்ந்திருக்கின் றன. நாட்டுமக்கள் பொறுமையின் எல்லைக்கு சென்று மனக்கலக்கம் அடைந்திருக்கிறார்கள். இலங்கை இன்று பிச்சைப்பாத்திரத்துடன் உலக நாடுகளின் கதவைத் தட்டவேண்டிய அளவுக்கு தரமிறங்கியிருக்கிறது. ஆனால், அதுகூட குழப்பத்துக்குள்ளாகியிருக்கிறது. அரசாங்க அதிகாரிகள் அவசரகால நிதிக்காக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவிருக்கிறார்கள். இலங்கையின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு வெறுமனே 5 கோடி டொலராக வீழ்ச்சி கண்டுவிட்டது.

அவசர உதவி தேவைப்படுகிறது. ஆனால், அதற்கு கொடுக்கவேண்டிய விலை என்ன? குழப்பகரமான நிலையில் நாட்டுக்குத் தலைமைதாங்கும் ஜனாதிபதி தீண்டத்தகாதவராக மக்களால் கருதப்படுகின்ற அதேவேளை, நாடாளுமன்றத்தில் ஒரேயொரு ஆசனத்தை மாத்திரம் கொண்டிருக்கும் ஒருவரை பிரதமராக நியமிப்பதன் மூலம் மக்ளின் சீற்றத்தை அடக்கிவிடமுடியாது என்பதை சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தும் அரசாங்க அதிகாரிகள் தெரிந்துகொள்ளவேண்டும். தவிர்க்கமுடியாத சிக்கன நடவடிக்கைகளை தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கின்ற சூழ்நிலையின் ஊடாக நாட்டை வழிநடத்த மதிப்புக்குரிய நம்பகத்தன்மையான தலைவர் ஒருவர் தேவை. மற்றும்படி மக்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்.

ராஜபக்ஷ வீட்டுக்கு போகவே வேண்டும். அதை விடுத்து வேறு வழி தேடினால் மேலும் உறுதிப்பாடின்மையும் வன்முறையுமே நேரும். மாற்றத்துக்கான அரிய வாய்ப்பும் பாழடிக்கப்படும். ராஜபக்ஷ என்ற குடும்பப் பெயரைக்கொண்ட வேறு மூன்று அமைச்சர் கள் ஏற்கனவே கடந்தவாரம் பதவி விலகினார்கள். மிகவும் நீண்டகாலமாக ஊழல்தனமான ஒரு குடும்பத்தினாலேயே தாங்கள் ஆளப்பட்டுவந்தார்கள் என்பதையும் அவர்களில் எவரையுமே இனிமேல் அதிகாரத்தில் விட்டுவைக்கப்படக்கூடாது என்பதையுமே இது நாட்டுமக்களுக்கு நினைவூட்டுகிறது.

பரந்தளவு ஆதரவைக்கொண்டிருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவதை மாத்திரம் விரும்பவில்லை. அவரது தவறான முகாமைத் துவத்துக்காகவும் ஊழல் மற்றும் பல தசாப்தங் களாக முன்வைக்கப்பட்டுவரும் மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுகளுக்காகவும் அவர் பொறுப்புக்கூறவேண்டும் என்றும் அவர்கள் கோருகிறார்கள். பழையவர்களை மாற்றிமாற்றி அமைச்சர்களாக நியமிப்பதை யல்ல, புதியதொரு இலங்கையை ஆர்ப்பாட் டக்காரர்கள் நாடி நிற்கிறார்கள். ஆனால், பழையவர்களே இன்னமும் பொறுப்பான பதவிகளில் தொடரும் நிலையில் அரசியலில் அடிப்படையான மாற்றம் நிகழமுடியாது.

ராஜபக்ஷாக்களுக்கு சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிப்பது குறித்த சிந்தனையை அரசியல்வாதிகள் வளர்த்துக்கொள்ளக்கூடாது. அவ்வாறு செய்வதை துரோகச்செயலாகவே மக்கள் நோக்குவார்கள்.

ராஜபக்ஷ எந்தளவுக்கு அதிகாரத்தில் இருக்கிறாரோ சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அவசர உதவிகளைப் பெறுவது அந்தளவுக்கு தாமதமாகும். மக்கள் பட்டினி கிடக்கவேண்டிவரும். எந்தளவு தூரத்துக்கு மக்கள் பட்டினி கிடக்கிறார்களோ அந்தளவு தூரத்துக்கு ஆர்ப்பாட்டங்கள் இடைவிடாமல் தொடரும். அமைதியின்மை எந்தளவுக்கு கூடுதலாக இருக்கிறதோ அந்தளவுக்கு ராஜபக்ஷ கூடுதல் வன்முறையில் நாட்டம் காட்டக்கூடிய ஆபத்து இருக்கிறது.

மக்களின் இந்த அமைதிவழிப் போராட்ட இயக்கத்தை ஒடுக்குமாறு பிறப்பிக்கப்படக்கூடிய உத்தரவுகளை பொலிஸும் இராணுவமும் பின்பற்றுவதை அரசாங்கத்தினால் நிச்சயமாக உத்தரவாதப் படுத்த முடியாது. சாதாரண படைவீரரினதும் பொலிஸ்காரர்களினதும் குடும்பங்கள் அதே பொருளாதாரப் பிரச்சினையால் கஷ்டப்படுகின்றன. கோட்டையில் வெடிப்புகள் தோன்றுகின்றன. தவிர்க்கமுடியாத வீழ்ச்சி எம்மெல்லேரையும் நசுக்கிவிடக்கூடாது என்று நம்புவோமாக.

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து



( நன்றி - அல்-ஜஸீரா)

## நக்கல் நமசிவாயம்

பெற்றோல் இருக்கேக்க டீசல் இருக்காது.. டீசல் இருக்கேக்க பெற்றோல் இருக்காது... ரெண்டும் இருக்கிற நேரம் காசு இருக்காது... காசு கிடைக்கும் வழிகளை செய்ய இந்த ஆட்சி இருக்காதோ என்னவோ...



# அண்ணனின் மெய்யறிவும் தம்பியின் அறிவற்ற நடத்தையும்!



முன்னாள் அமைச்சர் சமால் ராஜபக்ஷ தனது இளைய சகோதரர் மஹிந்த ஜனாதிபதியாக இரண்டாவது பதவிக்காலத்தை பூர்த்திசெய்த பிறகு அரசியலை விட்டு வெளியேறியிருக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார். இது அவர் தம்பியாருக்கு தனிப்பட சொல்லியிருக்கக்கூடிய விடயம். அதை அவர் ஏன் நாடாளுமன்றத்தில் சொன்னார்?

மஹிந்த மாத்திரமல்ல, ராஜபக்ஷ குடும்பத்தின் சகல உறுப்பினர்களுமே பிரச்சினையில் சிக்கியிருக்கிறார்கள். அவர்களது உடைமைகள் கும்பல்களின் தாக்குதல்களுக்கு இலக்காகியிருக்கின்றன. அவர்களால் சுதந்திரமாக நடமாட முடியாமல் இருக்கிறது. ஆத்திரமுற்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் ராஜபக்ஷக்கள் மீது வசைமாரி பொழிகிறார்கள். அவர்களின் முன்னாள் ஆதரவாளர்களும் வெறுக்கிறார்கள். பலம்பொருந்திய ஆளும் குடும்பத்துக்கு இத்தகைய கதி நேரும் என்று ஒரு வருடத்துக்கு முன்னர் எவராவது நினைத்திருப்பார்களா?

முக்கியமாக, நாட்டுமக்களை மடையர்களாக நினைத்த காரணத்தினாலேயே ராஜபக்ஷ குடும்பம் இன்றைய ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. நாட்டை தங்களது கொத்தளம் என்று நினைத்த ராஜபக்ஷக்கள் ஓர் அரசியல் காந்தமாக விளங்கிய மஹிந்தவின் மண்ணிற சால்வையை பயன்படுத்தி நாட்டு மக்கள் மீது சவாரி விடலாம் என்று நம்பிக்கொண்டிருந்தார்கள். தொடர்ச்சியாக தேர்தல்களில் வெற்றிபெற்று மக்களை மடையர்களாக்கலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள்.

10ஆம் பக்கம் பார்க்க....

# இன்றைய நாளில்...

- 1633 – மட்டக்களப்பு நகரை போர்த்துக்கீசரிடமிருந்து ஒல்லாந்தர் கைப்பற்றினர்.
- 1844 – பாரசீக மதகுரு பாப் பாபிசம் என்ற தனது மதக்கொள்கையை வெளியிட்டார். இவரே பகாய் சமயத்தைத் தோற்றுவித்த பகாவுல்லாவின் முன்னோடி எனக் கருதப்படுகிறது. பகாய் சமயத்தவர் இந்நாளை புனித நாளாகக் கொண்டாடுகின்றனர்.
- 1911 – நியூயோர்க் பொது நூலகம் பொதுமக்களுக்குத் திறக்கப்பட்டது.
- 1951 – திபெத்தின் விடுதலைக்கான 17 அம்ச உடன்பாட்டில் திபெத்தியர்கள் கட்டாயமாகக் கையெழுத்திட வைக்கப்பட்டார்கள்.
- 1958 – ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செயற்கைக்கோள் எக்ஸ்புளோரர் 1 தனது பூமியுடனான தொடர்பை இழந்தது.
- 2008 – கிளிநொச்சி மாவட்டம், முறிகண்டி அக்கராயன் வீதியில் இலங்கைப் படையினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் குழந்தைகள் உட்பட 16 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

# கனேடிய நாடாளுமன்ற பொதுச் சபையின் பிரேரணைக்கு எதிர்ப்பை வெளியிட்டார் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

## உயர்ஸ்தானிகரை சந்தித்து நிலைப்பாட்டை விளக்கினார்

2022 மே 18ஆம் திகதி கனேடிய நாடாளுமன்றத்தில் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்காக இலங்கை அரசாங்கத்தின் உறுதியான எதிர்ப்பையும் ஆழ்ந்த கவலையையும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் பதிவு செய்தார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் அண்மையில் இடம்பெற்ற இலங்கைக்கான கனடாவின் பதில் உயர் ஸ்தானிகர் அமண்டா ஸ்ட்ரோஹானுடனான சந்திப் பில், பிரேரணையின் அப்பட்டமான பொய்யான உள்ளடக்கத்தை திட்டவட்டமாக நிராகரித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், இலங்கையில் இனப்படுகொலை நடைபெற்றதாகக் கண்டறியப்படவில்லை என்ற கனடா அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு அதன் தவறான பொருள் அடிப்படையில் முரண்படுவதாகக் குறிப்பிட்டார். குறிப்பிட்ட சட்ட அர்த்தங்களைக் கொண்ட இத்தகைய தொழில்நுட்பச் சொற்கள் எச்சரிக்கையுடனும் பொறுப்புடனும் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும், அத்துடன் கனேடிய அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எவரேனும் ஒப்புதலளிப்பதாகத் தோன்றும் ஆபத்துகளையும் அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

இந்த பிரேரணையின் தவறான மற்றும் பாரபட்சமான தன்மை மற்றும் இத்தகைய நடத்தையின் விளைவாக பொது களத்தில் உருவாகியுள்ள இலங்கை மீதான எதிர்மறையான கருத்துகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பிரேரணையில் உள்ள தவறுகளை சரிசெய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கனேடிய அரசாங்கத்தை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கேட்டுக்கொண்டார். இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையில் ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்து வரும் வலுவான இருதரப்பு உறவுகளின் பின்னணியில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, பதில் உயர்ஸ்தானிகர் ஸ்ட்ரோஹான், கனடாவின் நாடாளுமன்ற பொதுச் சபையில் ஏற்றுக்கொள்ளப் பட்ட தனிப்பட்ட உறுப்பினர்களின் பிரேரணையின் கட்டுப்பாடற்ற, சட்ட மியற்றும் தன்மையைக் குறிப்பிட்டார்.

தகுந்த நடவடிக்கைக்காக, அரசியல்



முன்முயற்சியின் உள்ளடக்கத்தை கனடாவின் வெளியுறவு, வர்த்தகம் மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு தெரிவிக்கவும் அவர் ஒப்புக்கொண்டார்.

# ஏறாவூரில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்துடன் தொடர்புடைய 15 பேருக்கு விளக்கமறியல்

## 16 வயது சிறுவனும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவிப்பு

(கனகராசா சரவணன்)

ஏறாவூரில் ஹாபீஸ் நஸீர் அஹமட்டின் காரியாலயம், வீடு மற்றும் உறவினரின் வீடு, ஹோட்டல், கடை ஆகியவற்றுக்கு தீவைப்பு மற்றும் ஆடைத்தொழிற்சாலை உடைத்து சேதப் படுத்திய சம்பவம் தொடர்பாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரால் நேற்று முன்தினம் சனிக்கிழமை (21) கைது செய்யப்பட்ட 16 வயது சிறுவன் ஒருவர் உட்பட இதுவரை 15 பேர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

ஹாபீஸ் நஸீர் அஹமட்டின் ஏறாவூர் பிரதான வீதியிலுள்ள காரியாலயம் வீடு அவரது உறவினாரின் வீடு, ஹோட்டல், கடை என்பவற்றை கடந்த 10ஆம் திகதி இரவு தீக்கிரையாக்கியதுடன் 3 ஆடைத்தொழிற்சாலையினை முற்றுகையிட்டு சேதமாக்கினர்.

இந்த வன்முறைச் சம்பவம் தொடர்பாக மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்காவின் ஆலோசனைக்கமைய மாவட்ட குற்ற விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வந்த விசாரணையில் நேற்று சனிக்கிழமை ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த எதிர்வரும் திங்கட்கிழமை க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள 16 வயது சிறுவன் உட்பட இதுவரை 15 பேரை கைது செய்தனர்.

இதில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்ட சிறுவனை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது அவரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவனை பரீட்சை நிலையத்துக்கு கொண்டு சென்று பரீட்சை எழுத அனுமதிக்குமாறும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்த வன்முறைச் சம்பவம் தொடர்பாக ஹோட்டலில் இருந்து கொள்ளையிடப்பட்ட பொருட்களுடன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் 14 பேரை கைது செய்து ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

இந்த வன்முறைச் சம்பவம் தொடர்பாக இதுவரை 15 பேரை கைது செய்துள்ளதாகவும் இதனுடன் தொடர்புபட்ட பலர் தலைமறைவாகியுள்ளதாகவும் இதில் ஒருவர் நேற்றைய தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமான நிலைய பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் தலைமறைவாகியுள்ள ஏனையவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மாவட்ட குற்ற விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

# குரங்கு அம்மை நோய்: பரிசோதனைகள் ஆரம்பம்

உலகின் பல நாடுகளில் பரவியுள்ள குரங்கு அம்மை தொற்று நோய் தொடர்பான பரிசோதனையை மேற்கொள்ள மற்றும் நோய்த் தொற்றை கண்டறிவதற்கான வசதிகள் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை எதிர்ப்பு சக்தி, ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழகத்தின் ஒவ்வாமை எதிர்ப்பு சக்தி அறிவியல் மற்றும் உயிரணு ஆய்வு நிறுவகத்தில் அது தொடர்பான பரிசோதனையை மேற்கொள்ள முடியும் என அவர் ட்விட்டர் பதிவொன்றை இட்டுள்ளார். மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்க நாடுகளில் குரங்கு அம்மை தொற்று அடையாளம் காணப்பட்டது.

அந்த நோய் தற்போது ஐரோப்பிய நாடுகளுக்கிடையேயும் பரவத்தொடங்கியுள்ளது.

இதனால் உலக சுகாதார அமைப்பு லண்டன் நகரில் அவசரக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

ஜேர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி, நெதர்லாந்து, போர்த்துக்கல், ஸ்பெயின், சுவீடன் மற்றும் ஐக்கிய இராச்சியத்திலும், மற்றும் அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் குரங்கு அம்மை நோய்த் தொற்று தீவிரமடைந்துள்ளது. இதுவரையில், ஐரோப்பாவில் 80க்கும் அதிக குரங்கு அம்மை நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

# வன்முறை தீவிரவாதத்தை தடுப்பது தொடர்பில் விசேட செயலமர்வு மன்னாரில்









(மன்னார் நகர் செய்தியாளர்)

இலங்கையில் வன்முறை தீவிரவாதத்தை தடுப்பதற்கான சமூகக் குழுக்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான விசேட செயலமர்வு தேசிய சமாதான பேரவையின் பிரதிநிதியான அமில மதுஸங்கவின் பங்குபற்றுதலுடன் மன்னார் மாவட்ட தொடர்பாடலுக்கான மையத்தின் இணைப்பாளர் ஜசோதரன் தலைமையில் மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (22) காலை இடம்பெற்றது.

தேசிய சமாதான பேரவையின் ஏற்பாட்டில் இலங்கை கெல்விட்டாஸ்க் அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையில் மாவட்ட ரீதியில் உள்ள இளைஞர்கள், சர்வமத குழு உறுப்பினர்கள், அரச உத்தியோகஸ்தர்கள், கிராம மட்ட அமைப்புகளை உள்ளடக்கி மேற்படி செயலமர்வு இடம்பெற்றது.

பிரதேச ரீதியாக ஏற்படும் பிரிவினைகள், வன்முறை தீவிரவாத செயற்பாடுகளை நோக்கி நகர்வதை தடுக்கும் நோக்கிலும், பிரதேச மற்றும் மாவட்ட ரீதியில் இயங்கிவரும் சிவில் சமூக குழுக்களின் தீவிரவாதத்திற்கு எதிரான செயல் திறன்களை மேம்படுத்தும் விதமாக குறித்த செயலமர்வு ஒழுங்கமைக்கப்பட்டு இடம்பெற்றது.

குறித்த செயல் திட்டமானது, ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய இரு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இலங்கையில் இன ரீதியான முரண்பாடுகள் அதிகம் காணப்படும் ஆறு மாவட்டங்கள் உள்வாங்கப்பட்டு அப் பகுதிகளில் இச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கெற்பேலி காணியிலிருந்து கைக்குண்டுகள் மீட்பு



(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை பெருமளவான கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

காணி துப்புரவு நடவடிக்கையின்போது குறித்த கைக்குண்டுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அது தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு வெடிபொருட்களை மீட்பதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்போது 36 கைக்குண்டுகள் அடையாளம் காணப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# MAS, Hemas மற்றும் CBL ஆகியவற்றின் 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரணம் இதுவரை 10,000 குடும்பங்களைச் சென்றடைந்துள்ளது

## அனைத்து பெரு நிறுவனங்களையும் நாடளாவிய ரீதியிலான மேற்படி அவசர நிவாரணப் பணியில் இணையுமாறு அழைப்பு

மனிதநேய ஒன்றிணைவு

தற்போது நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், நாடு முழுவதும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள சமூகங்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்கும் நோக்கிலான, 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண முயற்சியானது, தற்போதைக்கு அத்தியாவசிய தேவையுடைய 10,000 குடும்பங்களுக்கு சென்றடையும் வகையில் அதன் முதலாவது மைல்கல்லை எட்டியுள்ளது."

மேற்படி செயற்றிட்டத்தின் நிறைவேற்று பங்காளியான சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் சுயாதீன கணக்காய்வாளர் PwC Sri Lanka உட்பட ஒருமித்த எண்ணம் கொண்ட பங்காளிகளுடன் கைகோர்த்தவாறு, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC மற்றும் CBL குழுமம் ஆகியவற்றின் ஒன்றிணைவில் இந்த 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகும்.

நாடளாவிய ரீதியில் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் அடிப்படைத் தேவைகள் எதுவுமே இல்லாமல் அவதியுறும் 2,00,000 இற்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்டுள்ள வறிய குடும்பங்கள் மற்றும் சமூகங்களை சென்றடையும் வகையிலான உன்னத நோக்கிலேயே இந்த நிவாரணத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின் றது.

ITN சியத்த, சுவர்ணவாஹினி, ரிவி தெரண மற்றும் வசந்தம் ஆகியன ஊடகப் பங்காளிகளாக இந்த முயற்சிக்கு ஊடக அனுசரணையை வழங்கி வருகின்றன. அதற்கமைய, தற்போது நாட்டின் அனைத்து 25 மாவட்டங்களிலும் குறித்த அவசரகால நிவாரணம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

மேலும், பயனுள்ள பொருளாதார முன் மாதிரி திட்டத்தினூடாக நிலையான நலன் பரிமாற்ற முறையொன்று நாட்டில் நிறுவப்படும் வரை மேற்படி 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண வேலைத்திட்டமானது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இலங்கை முழுவதிலுமுள்ள 2,00,000இற்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதை இலக்காகக் கொண்ட இந்த நிவாரணப் பணியில் ஒன்றிணைய முன்வருமாறு அனைத்து நிறுவனங்களையும் 'மனிதநேய ஒன்றிணைவு' அழைப்பு விடுக்கின் றது. மனிதநேய ஒன்றிணைவு நிவாரணப் பணிகள் குறித்து மேலதிக தகவல்களை - https://www.dialog.lk/corporate மூலம் அறிய முடியும்.





நாட்டின் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய அவசரகால நிவாரண விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.







எரிவாயு விநியோகிக்கும் நடவடிக்கை ஆலையடிவேம்பு தர்மசங்கரி மைதானத்தில் நேற்று (22) இடம்பெற்றது. (படப்பிடிப்பு : ஆலையடிவேம்பு நிருபர்)









வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மக்களுக்கு லிட்ரோ எரிவாயு விநியோக நடவடிக்கை வாழைச்சேனை பொலிஸ் நிலையம் முன்பாக ஓட்டமாவடி வர்த்தக சங்கத் தலைவர் எம்.ஏ.சி.எம்.நியாஸின் முயற்சியினால் நேற்று (22) இடம்பெற்றது. (படங்கள் - கல்குடா நிருபர்)

# ஹட்டனில் எரிபொருள், எரிவாயு தட்டுப்பாட்டால் மக்கள் விரக்தியில்: முகவர்களுடன் முரண்பாடு





(க.கிஷாந்தன்)

நாட்டில் சமையல் எரிவாயு, எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றுக்கான வரிசை நாளுக்குநாள் நீளும் நிலையில், மக்களும், வாகன சாரதிகளும் பல்வேறு இன்னல்களை சந்திக்க நேரிடுகின்றது.

குறிப்பாக, நுவரெலியா மாவட்டத்தில் ஹட்டன் மற்றும் கொட்டகலை பகுதிகளில் கடந்த 21ஆம் திகதியும் நீண்டநேரம் வரிசைகளில் காத்திருந்தவர்களில் பலர் ஏமாற்றத்தோடு வெறுங்கையுடன் வீடு திரும்பியுள்ளனர். விரக்தியால் மேலும் சிலர், புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க மீதும் சரமாரியாக விமர்சனங்களை முன்வைத்தனர்.

ஹட்டன் மற்றும் கொட்டகலை பகுதிகளில் எரிவாயு, எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை பெற்றுக்கொள்வதற்கு மக்கள் தினமும் வரிசைகளில் காத்திருக்கின்றனர். வாகனங்களும் அணிவகுத்து நிற்கின்றன. இதனால் போக்குவரத்து நடவடிக்கைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

சமையல் எரிவாயு விநியோக முகவர்களுக்கு குறிப்பிட்டளவு தொகை சிலிண்டர்களே வழங்கப்படுவதால், சமையல் எரிவாயுவை வாங்குவதற்காக வரிசையில் நின்ற அனைவருக்கும் அதனை பெற்றுக்கொள்ள முடியாமல்போனது. இதனால் முகவர்களுடன் மக்கள் முரண்படும் சம்பவங்களும் பதிவாகின.

எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் இந்நிலைமையே காணப்படுகின்றது. கேள்விக்கேற்ப நிரம்பல் இல்லாததால் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. சில இடங்களில் குறிப்பிட்டளவு எரிபொருளே விநியோகிக்கப்படுகின்றது. மண்ணெண்ணெய் விநியோகத்திலும் கட்டுப்பாடு காணப்படுகின்றது. இதனால் மக்கள் பெரிதும் பாதிப்படைந்து தமது வாழ்க்கையை எவ்வாறு கொண்டுசெல்வதென புலம்புகின்றனர்.

# பொலிஸாரின் பாதுகாப்புடன் கேஸ் சிலிண்டர் விநியோகம்



(செ.திவாகரன்)

நாடுபூராகவும் தட்டுப்பாடாக இருந்த லிட்ரோ எரிவாயு சிலிண்டர்கள் சுமார் 20 நாட்களுக்கு பிறகு நேற்று ஞாயிற்றுக்கிழமை (22) நுவரெலியா பிரதான நகரிலும் களஞ்சியசாலையிலும் பொலிஸாரின் பாதுகாப்பிற்கு மத்தியில் பொதுமக்களுக்கு சீராக வழங்கப்பட்டது.

லிட்ரோ எரிவாயு விநியோக மொத்த விற்பனை முகவர்களால் எடுத்துவரப்பட்டு சுமார் 500இற்கும் அதிகமான சிலிண்டர்கள் கடும் நெருக்கடிக்கு மத்தியில் நுவரெலியா, பொரலாந்த, ஹாவாஎலிய, பிலக்பூல், ஸ்கிராப், பம்பரகலை உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்து வருகைதந்த பொதுமக்களுக்கு பொலிஸாரின் மேற்பார்வையில் வழங்கப்பட்டது.

எரிவாயு கொள்வனவு செய்ய அதிகமான பொதுமக்கள் வருகைதந்த நிலையில் நுவரெலியா பொலிஸாரின் பாதுகாப்புடன் எரிவாயு விநியோகம் இடம்பெற்றது.

இந்த எரிவாயுவை பெற்றுக்கொள்ள நேற்று அதிகாலை மூன்று மணியிலிருந்து காத்திருந்த பொதுமக்கள் 8 மணியளவில் பெற்றுச்சென்றதைக் காணமுடிந்ததுடன், பல தனியார் துறைகளில் வேலை செய்பவர்கள் விடுமுறை பெற்று வந்து சிலிண்டர்களை கொள்வனவு செய்ததையும் அவதானிக்க முடிந்தது. இதில் அதிகமாக நுவரெலியா பிரதான நகரில் ஹோட்டல் உரிமையாளர்களின் நலன் கருதி தெரிவுசெய்து வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஹட்டனில் தரகர்கள் மூலம் சிலிண்டர்கள் கொள்வனவு

(மனுர சுதத் செல்வஹேவா)

ஹட்டனிலுள்ள சில ஹோட்டல் உரிமையாளர்கள், தரகர்களைப் பயன்படுத்தி ஹட்டனில் உள்ள எரிவாயு விநியோகஸ்தர்களிடமிருந்து எரிவாயுவை தமது தேவைகளுக்காக மறைமுகமாகப் பெற்றுக்கொள்வதில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, ஹோட்டல் உரிமையாளர்கள் சிலர், ஹட்டனில் எரிவாயு விற்பனைசெய்யும் ஒவ்வொரு விநியோகஸ்தர்களிடமும் சென்று ஹட்டனுக்கு வரும் அதிகளவிலான எரிவாயு சிலிண்டர்களை வசூலிக்க தரகர்களை அமர்த்தியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 21ஆம் திகதி ஹட்டனிலுள்ள எரிவாயு விநியோகஸ்தர் ஒருவருக்குக் கிடைத்த 80 எரிவாயு சிலிண்டர்களில் 30 சிலிண்டரை ஹோட்டல் உரிமையாளர் ஒருவர் தரகர் மூலம் தனது ஹோட்டலுக்கு எடுத்துச் சென்றதாகவும், காலையிலிருந்து வரிசையில் தாம் காத்திருந்தாலும் எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

இந்த ஹோட்டல் உரிமையாளர்களில் சிலர் பல்வேறு தரகர்கள் மூலம் எரிவாயுவை சேகரிப்பதால் அப்பகுதி மக்களுக்கும் நகரில் உள்ள ஏனைய ஹோட்டல்களுக்கும் எரிவாயுவைப் பெற முடியாத நிலை உள்ளதாகவும், இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் அவதானம் செலுத்த வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# எரிவாயு ஏற்றிச்சென்ற லொறியின் திறப்பை அபகரித்துச்சென்ற நுகர்வோர்

ஹட்டன் பிரதேசத்துக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிவந்த லிட்ரோ நிறுவனத்துக்குரிய லொறியின் திறப்பை, நுகர்வோர் சிலர் அபகரித்துச் சென்ற சம்பவம் நேற்றுமுன்தினம் (21) ஹட்டனில் இடம்பெற்றுள்ளது.

எனினும், பின்னர் ஹட்டன் பொலிஸார் தலையிட்டு திறப்பை மீண்டும் சாரதியிடம் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் 150 சிலிண்டர்களுடன் ஹட்டன் நகருக்கு லொறியொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், இதில் 140 சிலிண்டர்கள் முகவர் நிலையமொன்றில் இறக்கப்பட்டு, மிகுதியாக இருந்த 10 சிலிண்டர்கள் ஹட்டன் - மல்லியப்பூ சந்தியிலுள்ள ஹோட்டலொன்றுக்கு வழங்க லொறியின் சாரதியால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, குறித்த ஹோட்டலுக்கு அருகில் இருந்த சிலர், இந்த விடயம் தொடர்பில் லொறியின் சாரதியிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், லொறியின் திறப்பையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் லொறியின் சாரதியால் ஹட்டன் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, ஹட்டன் பொலிஸ் போக்குவரத்துப் பொலிஸார் தலையிட்டு லொறியின் திறப்பை சாரதியிடம் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# மாணவனை காணவில்லை



(அவிசாவளை நிருபர்)

எட்டியாந்தோட்டை புனித மரியாள் தேசியக் கல்லூரியில் தரம் 11இல் கல்விப் பயிலும் புஷ்பராஜ் கிஷோத்திரன் எனும் மாணவன் நேற்று முன்தினம் 21ஆம் திகதி தனியார் வகுப்புக்குச் செல்வதாகக் கூறி வீட்டை விட்டுச் சென்றவர், இன்னும் வீடு திரும்பவில்லை என பெற்றோர் தெரிவிக்கின்றனர். இவர் எட்டியாந்தோட்டை மீபிட்டிகந்த தோட்டத்தைச் சேர்ந்தவர். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் 0776146216, 0783761663 மற்றும் 0714148152 ஆகிய தொலைபேசி இலக்கத்திற்கு தகவல் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

# ஜன்னல் வழியே தலையை நீட்டி பயணித்த மூன்றரை வயது குழந்தை லொறியில் மோதுண்டு பலி!

(கண்டி நிருபர், ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்த மூன்றரை வயது குழந்தையொன்று வீதிக்கு அருகாமையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறியில் மோதுண்டு உயிரிழந்த சம்பவம் மாவனெல்லை பகுதியில் நேற்று முன்தினம்(21) இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவத்தின்போது பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்த குழந்தை திடீரென ஜன்னலுக்கு வெளியில் தலையை நீட்டி எட்டிப் பார்த்துள்ளது. அச்சமயம் பாதையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றில் குழந்தையின் தலை மோதியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் பலத்த காயத்துக்குள்ளான குழந்தை மாவனெல்லை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டபோதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவனல்லை - ரம்புக்கனை வீதியில் கிரிகல சந்திக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உஸ்ஸாபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த மூன்றரை வயது குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். பஸ் சாரதி கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐ.நாவில் தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினைகளை முறையிட தீர்மானம்

## காணி உரிமைக்கான செயற்பாட்டாளர் தெரிவிப்பு



தெற்காசிய நாடுகளில் தேயிலைத் தோட்டங்களில் தொழில் புரியும் தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினைகள் அடங்கிய முறைப்பாடு ஒன்றினை ஐக்கிய நாடுகள் சபையிடம் முன்வைக்கவுள்ளதாக காணி உரிமைக்கான செயற்பாட்டாளர் எஸ்.ரி.கணேசலிங்கம் தெரிவித்தார்.

சர்வதேச தேயிலை தினமான நேற்று முன்தினம் 21ஆம் திகதி ஹட்டனில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய சூழலில் சர்வதேச தேயிலை தினம் கொண்டாட முடியாத ஒரு நிலையே காணப்படுகின்றது. இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் உள்ளிட்ட தெற்காசிய நாடுகளில் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர்கள் ஒரே மாதிரியான பிரச்சினைகளுக்கே முகங்கொடுத்து வருகின்றனர்.

அந்நிய செலவாணியை தேடித்தரும் இவர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப் படவில்லை. இவர்களுக்குரிய உரிமைகள் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. இது குறித்து அந்தந்த நாடுகளின் தொழிற்சங்கங்கள், அரசியல், சமூக செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புகள் ஆகியன இணைந்து 'சூம்' தொழில்நுட்பத்தின் மூலம் கலந்துரையாடி ஐக்கிய நாடுகள் சபையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மலையக தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கென்று இன்றும் வீட்டுரிமை கிடையாது. காணியுரிமை கிடையாது. இந்த நிலையில் நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமற்ற தன்மை காரணமாக பொருளாதார ரீதியில் பாரியளவில் தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்தார்.

# வயிற்றுவலியால் பாடசாலை சிறுவன் மரணம்



(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிலுள்ள சாமிமலை டீசைட் தோட்டத்தில் பாடசாலை செல்லும் 8 வயது சிறுவன் ஒருவன் நேற்றுமுன்தினம்(21) காலை வயிற்றுவலியால் உயிரிழந்துள்ளான்.

வயிற்றில் ஏற்பட்ட உபாதை காரணமாக தனது மகளின் ஒரே மகனான லோரன்ஸை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல தன்னால் இயன்றவரை முச்சக்கரவண்டியை தேடி அலைந்துள்ள போதிலும் எரிபொருள் இல்லாத காரணத்தால் ஒரு வாகனம்கூட கிடைக்காத நிலையில், 1990 அம்பியூலன்ஸ் மூலம் கொண்டு செல்ல எத்தனித்தபோது அம்பியூலன்ஸில் வந்தவர் சிறுவனை பரிசோதனை செய்தபோது சிறுவன் இறந்துள்ளார் என கூறினார்.

அதனைத் தொடர்ந்து சிரமத்தின் மத்தியில் மஸ்கெலியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும், சிறுவன் இறந்தநிலையில் உள்ளதால் டிக்கோயா - கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டது என்று சிறுவனின் பாட்டி தெரிவித்தார்.

குறித்த சிறுவனின் தந்தை சிறையில் உள்ளதாகவும், தாய் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்துவந்த நிலையில், அங்கும் தற்போது வேலை குறைவு காரணமாக கொழும்பில் பணி புரிந்து வருகின்றார். இதனால் தனது மகனை தாயின் பொறுப்பில் விட்டுச்சென்றுள்ளார் என தெரியவருகிறது.

சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் தாயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# பதுக்கிவைத்திருந்த கோதுமை மா விலையேற்றத்தின் பின் விற்பனை

(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியாவில் கடந்த சில தினங்களாக கோதுமை மா பெற்றுக்கொள்ள முடியாமல் நுகர்வோர் அவதிப்படுவதை காணக்கூடியதாக இருந்தது.

இப்பகுதியிலுள்ள கோதுமை மா மொத்த வியாபாரி ஒருவர் பெருந்தொகையான கோதுமை மாவை அவரது குடோனில் பதுக்கி வைத்திருந்து விலையேற்றத்தின் பின் அதிக விலைக்கு விற்பனை செய்துள்ளார்.

விலையுயர்வின் பின் தற்போது தாராளமாக ஏனைய கடைகளுக்கும் பகிர்ந்தளிப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. மஸ்கெலியா நகரிலுள்ள பிரிமா கோதுமை மா மொத்த வியாபாரி ஏனைய கடைகளுக்கும் மொத்தமாக கோதுமை மா விநியோகம் செய்பவர்.

இவர் கோதுமை மாவை பதுக்கிவைக்காமல் ஏனைய கடைகளுக்கு வழங்கியிருந்தால் மக்களின் அவதி நிலையை தடுத்திருக்கலாம்.

கடந்த சில மாதங்களாக அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வால் பல இலட்சம் ரூபாவை இவ்வாறான பதுக்கல் வியாபாரிகள் சம்பாதித்துள்ளனர். இதனால் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுதொடர்பில் கவனம் செலுத்துமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# உக்குவளையில் தெருநாய் தொல்லையால் மக்கள் அவதி

(உக்குவளை நிருபர்)

உக்குவளை நகரிலும் அதனை அண்டிய கிராமங்களிலும் தெருநாய்களின் தொல்லை சமீபகாலமாக அதிகரித்து காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இவற்றில் சில நாய்கள் நோய்வாய்ப்பட்டு தெருக்களில் ஆங்காங்கு இறந்துகிடப்பதுடன், சிலர் நாய்க்கடிக்குள்ளாகி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக செல்லும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

மருந்து தட்டுப்பாடுள்ள இக்காலகட்டத்தில் தெருநாய்க்கடிக்குள்ளாகி தம்மால் சிரமத்தை எதிர்நோக்கமுடியாதென தெரிவிக்கும் மக்கள் இதுதொடர்பில் நகரசபையினர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.







தெமோதரை புகையிரத நிலையத்துக்கு அருகிலுள்ள வனப்பகுதிக்கு இனந்தெரியாதவர்களால் தீ வைக்கப்பட்டுள்ளது. இதனால், 40 ஏக்கருக்கும் மேற்பட்ட வனப்பகுதி தீக்கிரையானது. தீயைக் கட்டுப்படுத்துவதற்கு மக்கள் பாரிய முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் வனப்பகுதி முற்றாக தீக்கிரையானது.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து ஜனநாயக பண்போடு பயணிக்க விரும்பாதவர்கள் வெளியேறலாம்

## யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து ஒழுங்காக ஜனநாயக பண்புகளோடு பயணிக்க விரும்பாத எவரும் கட்சியிலிருந்து வெளியேற பூரண சுதந்திரம் உண்டு - என யாழ். மாநகர முதல்வரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது கட்சி அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து எம்மை யாரும் நீக்க முடியாது. இந்த அமைப்பை தொடங்கிய ஆரம்பத்திலிருந்து நாங்களும் உள்ளோம். ஒருவேளை அமைப்பிலிருந்து நீக்குவதாக இருந்தால் பொறிமுறையொன்று இருக்கின்றது. அதனை சரியாக செய்யவேண்டும்.




தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து ஒழுங்காக ஜனநாயக பண்புகளோடு பயணிக்க தயாரில்லாத - விரும்பாத எவரும் கட்சியிலிருந்து வெளியேற பூரண சுதந்திரம் உண்டு. அந்த முன்னணியின் பெரும்பாலான உறுப்பினர்கள் எங்களுடன் இருக்கின்றார்கள்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 2010ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபோது வரதராஜனும் பின்னர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தலைவராக இருந்தனர். அதன் பின்னர் எந்தவொரு நியமனங்களும் செய்யப்படவில்லை. விரைவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிர்வாகம் கூட்டப்பட்டு புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட வேண்டும். நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து விலகிக்கொள்ள முடியும் - என்றார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பும் மணிவண்ணன் தரப்பும் உரிமைகோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண சிறைச்சாலை முன்றலில் 'காத்திருப்போர் மண்டபம்' திறந்துவைப்பு

(யாழ். நிருபர்)



"சிறைக் கைதிகளும் மனிதர்களே" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாண சிறைச்சாலையிலுள்ள தமது உறவுகளை பார்வையிட வரும் மக்களுக்கான வசதிகளை மேம்படுத்தும்நோக்கில் காத்திருப்போர் மண்டபம் ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாண சிறைச்சாலை முன்றலில் திறந்துவைக்கப்பட்டது

நீண்டகாலமாக யாழ். சிறைச்சாலையிலுள்ள தமது உறவுகளை



பார்வையிட வரும் உறவுகள் வெயிலில் நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய நிலை காணப்பட்டது. யாழ்ப்பாண சிறைச்சாலை அத்தியட்சகரினால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் காத்திருப்போர் மண்டபம் ஒன்று அமைத்து தருமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கிணங்க, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தியின் முயற்சியால் அறக்கட்டளை நிதியம் ஒன்றின் நிதிப் பங்களிப்பில் காத்திருப்போர் மண்டபம் நேற்று முன்தினம் சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் சமாதானத்தை வலியுறுத்தி சமாதானப் புறாவும் பறக்கவிடப்பட்டது.

இந்நிகழ்வில் எஸ்.கே.நாதன் அறக்கட்டளை நிதியத்தின் இயக்குனர் சுப்பிரமணியம் கதிர்காமநாதன் மற்றும் யாழ்ப்பாண சிறைச்சாலையின் அத்தியட்சகர் கே.வி.ஏ. உதயகுமார, யாழ்ப்பாண சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர் எச்.எம்.ஹேரத், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# வாள்வெட்டுக் கும்பலைச் சேர்ந்த 5 பேர் கைது

வன்முறைக் கும்பலொன்றைச் சேர்ந்த அளவெட்டி கனி என்றழைக்கப்படுபவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய கும்பலைச் சேர்ந்த 5 பேர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

திருட்டு மோட்டார்சைக்கிள்களை பயன்படுத்தியே இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை நேற்று முன்தினம் முன்னெடுத்தனர்.

கடந்த 17ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் சண்டிலிப்பாய் தொட்டிலடிச் சந்தியில் இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் அளவெட்டியைச் சேர்ந்த ஏ. ரதீஸ்வரன் (வயது-37) என்பவரே தலையில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பித்தனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கீழான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். அதனடிப்படையில் கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த இருவர், தெல்லிப்பழையைச் சேர்ந்த இருவர் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் என ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் வடமராட்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் கொள்ளையிடப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# டெங்கு காய்ச்சலினால் யாழ். சென் பற்றிக்ஸ் மாணவன் உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளார்.

கொழும்புத்துறை பாண்டியன்தாழ்வு பகுதியைச் சேர்ந்த கருணாகரன் ஆரோன் (வயது -11 ) என்ற யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவனே உயிரிழந்துள்ளார்.

கடந்த 18ஆம் திகதி காய்ச்சல் காரணமாக அவர் பனடோல் உட்கொண்டுவிட்டு இருந்துள்ளார். இந்நிலையில், கடந்த 19ஆம் திகதி மீண்டும் வயிற்றோட்டம் வாந்தி ஏற்பட்டு மாணவன் பாதிக்கப்பட்ட நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பலனின்றி கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

# யாழ். ஸ்ரான்லி வீதியில் கடை தீக்கிரை



யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள விற்பனை நிலையமொன்று நேற்று அதிகாலை தீப்பற்றி எரிந்து முற்றாக சேதமடைந்தது.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் விற்பனை நிலையத்தில் திடீரென ஏற்பட்ட தீ, கடை முழுவதும் பரவி முழுமையான சேதத்தை ஏற்படுத்தியது.

தீப்பரவலை கட்டுப்படுத்துவதற்காக யாழ். மாநகர சபை தீயணைப்புப் படை முயற்சிகளை மேற்கொண்டபோதிலும், அது பயனளிக்காத நிலையில் கடை முற்றாக எரிந்துள்ளது.

விற்பனை நிலையம் தீப்பற்றி எரிந்தமை தொடர்பில் மேலதிக தகவல்கள் எதுவும் வெளியாகாத நிலையில், யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமையில் எரிபொருள் வழங்கவேண்டும்

## வைத்திய கலாநிதி யமுனாநந்தா கோரிக்கை

வைத்தியசேவை அத்தியாவசிய சேவையாக உள்ளமையால் வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் வழங்குவதில் முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என யாழ். மாவட்ட செயலரிடம் வைத்தியகலாநிதி சி.யமுனாநந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக எரிபொருளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனால் பல தரப்பினரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதுடன், பல இன்னல்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த இரு தினங்களாக பெருமளவானோர் எரிபொருளுக்காக வரிசைகளில் காத்து நிற்கின்றனர். அதனால், வைத்தியசாலை பணியாளர்களும் எரிபொருள் இன்மையால் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையிலேயே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி.யமுனாநந்தா, மாவட்ட செயலரிடம் "வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் வழங்குவதில் முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என கோரிக்கை விடுத்துள்ளார்.







**தற்கால பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் மக்களுக்கு மன ரீதியான ஆறுதல் தேவை என்பதை உணர்த்தும் முகமாக ஸ்ரீலங்கா சுமித்ரயோ யாழ். கிளை தொண்டர்களால் நேற்று முன்தினம் ஒரு கிலோ நம்பர்-1 நாட்டரிசி ஒரு ரூபாவிற்கு வழங்கப்படும் விழிப்புணர்வு நடவடிக்கை யாழ். முத்திரைச் சந்தியை அண்மித்த கல்வியங்காடு சட்டநாதர் கோவிலடியில் மேற்கொள்ளப்பட்டது. 1ரூபா உள்ளவருக்கு மட்டுமே அரிசி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.**

# யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிபொருள் விநியோக நிலை

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பெறுவதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

நேற்று அதிகாலை முதல் கொக்குவில், திருநெல்வேலி, கல்வியங்காடு, அச்சுவேலி உட்பட யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு பகுதிகளிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காணப்பட்டனர்.

பரீட்சை கடமையில் ஈடுபடுவோர் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் உள்ளிட்டவர்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் பல இடங்களிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

ஒருசில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருட்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கினாலும் பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் காலை நேரத்தில் மூடப்பட்டே காணப்பட்டது.

அதேவேளை, எரிபொருள் பவுஸர்கள் வருகை தந்தவுடன் மதியம் மற்றும் மாலை வேளைகளில் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விநியோகிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.









சீட்டிழுக்கப்பட்ட திகதி 20.05.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4761
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,577,010.00
அச்சிடப்பட்ட திகதி : 13.05.2022
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 6 6 0 8 5 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,417,919.00

திகதி 21.05.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4762
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,903,620.00
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 1 6 0 9 7 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,929,323.00

ஜாதிக சம்பத — அச்சிடப்பட்ட திகதி 14.05.2022 சீட்டிழுப்பு இலக்கம் 1246
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,579,840.00
வெற்றி இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 3 1 4 7 5 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,311,799.60

கொவிசெத Govisetha — டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 2022.05.13 சீட்டிழுப்பு இலக்கம் 3003
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,595,920.00
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 15 55 61 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,217,416.56

கொவிசெத Govisetha — டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 2022.05.14 சீட்டிழுப்பு இலக்கம் 3004
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,977,700.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 06 31 32 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,529,766.56

தன நிதானய — டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /05 /13 சீட்டிழுப்பு இலக்கம் : 791
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,425,040.00
வெற்றி இலக்கினம் H வெற்றி இலக்கங்கள் 33 41 45 55
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,729,363.60

தன நிதானய — டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /05 /14 சீட்டிழுப்பு இலக்கம் : 792
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,203,420.00
வெற்றி இலக்கினம் Q வெற்றி இலக்கங்கள் 15 17 29 63
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,886,444.40

ராசீ சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 0070
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,823,760.40
லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 13.05.2022
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 13 24 32 40
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00

ராசீ சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 0071
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,386,000.00
லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 14.05.2022
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 06 14 47 48
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00

கோடி 23+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1109
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022.05.13
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,169,780.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 252,079,490.00
X 01 16 17 71 74
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

கோடி 25+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1110
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022.05.14
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,606,460.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 252,157,738.00
K 24 35 41 52 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
தொலைநகல்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# எரிவாயுவுக்காக காத்திருக்கும் மக்களிடமிருந்து பகல் கொள்ளை

## மிகுதி பணத்தை பெற்றுக்கொடுக்க முகவர்கள் மறுப்பதாக மக்கள் குற்றச்சாட்டு





(மாளிகைக்காடு நிருபர்)

நாட்டில் நிலவும் தட்டுப்பாடு காரணமாக சமையல் எரிவாயுவைப் பெற மக்கள் கடுமையான நெருக்கடியை அனுபவித்து வருகின்றனர். அதனடிப்படையில் நேற்று (22) காலைமுதல் சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் சமையல் எரிவாயு, லிட்ரோ எரிவாயு நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்டது. தேவையுடைய மக்கள் வெயிலையும் கவனத்தில் கொள்ளாது நீண்டவரிசையில் நின்று எரிவாயுவை பெற்றுச்செல்கின்றனர்.

அம்பாறை மாவட்ட விற்பனை விலை (12.5 கி.கி.) 4 ஆயிரத்து 970 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தும் இங்கு 5000 ரூபா அறவிடப்பட்டது. இது தொடர்பில் சமூக செயற்பாட்டாளர்கள் கேள்வியெழுப்பியபோது மக்களிடம் மிகுதியை கொடுக்க எங்களிடம் சில்லறை இல்லையென்று பிராந்திய விற்பனை முகவர் தெரிவித்தார். இதனால் பலத்த சலசலப்பு உருவாகியது.

மக்களிடமிருந்து ஒருவருக்கு 30 ரூபா வீதம் பகல் கொள்ளையிடப்படும் இந்த பணத்தினால் மொத்தமாக ஒரு பாரிய தொகை இறுதியில் சேரும் என்றும், ஏற்கனவே விலை அதிகரித்திருப்பதை தாங்கமுடியாமல் திணறும் நாங்கள் இப்போது வெயிலில் காத்திருந்து பகல் கொள்ளை வழங்கவேண்டி உள்ளது என்றும் தெரிவித்த மக்கள், அத்தியாவசிய தேவையறிந்து இந்த சமையல் எரிவாயுவை 10 ஆயிரம் ரூபா கொடுத்தும் வாங்கத் தயாராக இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

மிகுதியாக உள்ள அந்த 30 ரூபாவுக்கு பிஸ்கட் போன்ற மாற்று பொருட்களையாவது வாங்கி மிகுதிப்பணத்திற்கு பகரமாக வழங்கியிருக்க முடியும். ஆனால், இது தொடர்பில் நுகர்வோர் அதிகாரசபைக்கு பொதுமக்களினால் தொலைபேசியூடாக அறிவிக்கப்பட்டுள்ளது. நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மக்கள் உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருக்கிறார்கள்.

# கிண்ணியா எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பதற்றம்



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை, கிண்ணியா எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் (21) மாலை எரிபொருள் விநியோகம் இடம்பெற்றிருந்த நிலையில், எரிபொருளுக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

எரிபொருள் பெற்றக்கொள்ள பெரும் எண்ணிக்கையிலான மக்கள் அங்கு வந்திருந்ததால் அந்தப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் பதற்றநிலை உருவாகியது.

கிண்ணியா - மட்டக்களப்பு பிரதான வீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே இவ்வாறு பதற்றநிலை ஏற்பட்டது. அதனையடுத்து அவ்விடத்தில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஒருசில மணிநேரம் மின்சாரமும் துண்டிக்கப்பட்ட நிலையிலும் கூட பெற்றோல் விநியோகம் இடம்பெற்றது. முச்சக்கரவண்டி, மோட்டார்சைக்கிள் என வெவ்வேறான நீண்ட வரிசகளை அவதானிக்கக்கூடியாக இருந்தது.

# ஊடகவியலாளர் மீது தாக்குதல்

## மூதூர் பிரதேசத்தில் சம்பவம்




(கந்தளாய் நிருபர்)

மூதூர் பிரதேச சுயாதீன ஊடகவியலாளர் மொஹமட் புஹாரி நேற்று முன்தினம் (21) மூதூர் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக ஒரு குழுவினரால் தாக்கப்பட்டுள்ளார். அதனையடுத்து, அவர் மூதூர் தள வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் வரிசையில் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து செய்தி சேகரிக்கச் சென்றிருந்தபோதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஊடகவியலாளரின் கைபேசி மற்றும் மோட்டார்சைக்கிள் என்பன ஆறு பேர் கொண்ட குழுவினரால் பறித்துச் செல்லப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் ஊடகவியலாளரிடம் கைபேசி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யானையின் தாக்குதலில் குடும்பஸ்தர் பலி!

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அடைக்கல் பிரதேசத்தில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் (21) சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

பன்சேனை கிராமத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான வடிவேல் குணராசா (வயது- 40) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில மேலும் தெரியவருவதாவது,

சம்பவ தினத்தன்று தனது வீட்டிலிருந்து அடைச்சகல் பிரதேசத்திற்கு மேய்ச்சலுக்கு சென்ற தனது மாடுகளை அழைத்துவரச் சென்றபோது மறைந்திருந்த யானை தாக்கியதில் குறித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் பின்னர் அயலில் மீனிபிடியில் ஈடுபட்டவர்கள் கண்டபின்னர் குறித்த நபரின் உடலை சம்பவ இடத்திலிருந்து மீட்டெடுத்து வீட்டுக்கு கொண்டுவந்ததாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திடீரென தீப்பற்றி எரிந்த மோட்டார்சைக்கிள்



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு - காத்தான்குடி பிரதான வீதியில் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் வாகனயொன்று நேற்று முன்தினம் (21) திடீர் என தீப்பற்றி எரிந்ததுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதனையடுத்து, அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தபோதிலும் குறித்த மோட்டார்சைக்கிள் தீயில் எரிந்து சேதமாகியுள்ளது.

பெற்றோல் கசிவினாலேயே குறித்த தீப்பற்றல் ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வாழைச்சேனையில் திருட்டுபோன லொறி கம்பஹா பிரதேசத்தில் மீட்பு

## வாகனம் பழுதுபார்க்கும் இடமொன்றின் உரிமையாளர் கைது



(கனகராசா சரவணன்)

வாழைச்சேனை கூட்டுறவுச் சங்க வாகன தரிப்பிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறி காணாமல்போயிருந்த நிலையில், அதனை கம்பஹா கடுவல பிரதேசத்தில் கராஜ் ஒன்றில் நேற்று முன்தினம் (21) மீட்டுள்ளதுடன், கராஜ் உரிமையாளரை கைதுசெய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வசந்த பண்டார தெரிவித்தார்.

முகவர் நிலையமொன்றின் லொறியொன்று கூட்டுறவு சங்க வாகன தரிப்பிடத்தில் வழமைபோல நிறுத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், சம்பவதினமான கடந்த 10ஆம் திகதி வழமைபோல் வாகன தரிப்பிடத்துக்கு சாரதி சென்றபோது குறித்த லொறி திருடப்பட்டுள்ளது. அதனையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குற்றத்தடுப்புப் பிரிவினரால் மேற்கொண்ட விசாரணைகளில் 6 தொடக்கம் 7 மணிவரையிலான காலப்பகுதியில் காவலாளிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் குறித்த லொறி திருடடப்பட்டுள் ளமை தெரியவந்தது.

திருடப்பட்ட லொறி குறித்த பிரதேசத்திலுள்ள வாகனம் பழுதுபார்க்குமிடமொன்றில் வர்ணம் பூசவதற்காக ஒப்படைக்கப்பட்டிருந்தமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த வாகனம் பழுதுபார்க்குமிடத்தின் உரிமையாளரை கைது செய்துள்ளதுடன், லொறி மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளதாகவும் அவரை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தந்தையை இழந்த ஏழைச் சிறார்களுக்கு நிதி உதவி வழங்கும் நிகழ்வு




(கல்லடி நிருபர்)

எஸ்.டபிள்யூ.ஓ. அமைப்பினால் இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கையம்மன் ஆலய நிதியுதவி மூலமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் கிராமப்புறங்களில் வாழும் தந்தையை இழந்த ஏழை மாணவர்களுக்கு மாதாமாதம் ஆறாயிரம் ரூபா வழங்கும் ஆரம்ப நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (20) மேற்படி நிறுவனத் தலைவர் நயனி கிருஷ்ணாகரனின் தலைமையில் புதுக்குடியிருப்பு வளநிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஸ்ணமிஷன் உதவிப் பொது மேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீயும், பிரதம அதிதியாக மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயமும் கலந்துகொண்டனர்.

இதன்போது தெரிவுசெய்யப்பட்ட தந்தையை இழந்த 16 வறிய மாணவர்களுக்குத் உதவித்தொகை கையளிக்கப்பட்டது. இவ்வுதவித் தொகையானது எதிர்காலத்தில் அதிகரிக்கப்படவுள்ளதாக இந்நிறுவனத் தலைவரால் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவானாக ஊடகவியலாளர் உதயகாந்த் நியமனம்



(மட்டக்களப்பு நிருபர்)

கல்லடியைச் சேர்ந்த உதயகுமார் உதயகாந்த், மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்குட்பட்ட சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.பீற்றர்போல் முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் மட்டக்களப்பு கல்லடி - உப்போடை விவேகானந்தா கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும், கொழும்பு - மாதம்பிட்டி புனித அந்தோனியார் வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரண தரக் கல்வியையும், கல்லடி முகத்துவாரம் விபுலானந்தா வித்தியாலயத்தில் தனது உயர்தரக் கல்வியையும் கற்று குறித்த பாடசாலைகளின் பழைய மாணவருமாவார். அத்துடன், இவர் கிழக்கு பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கைநெறியையும் பூர்த்தி செய்துள்ளார்.

சுதந்திர ஊடகவியலாளராகிய இவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு சமூக நல அமைப்புகளில் ஸ்தாபகத் தலைவராகவும், செயலாளராகவும், ஆலோசகராகவும் அங்கத்துவம் வகித்து சமூக பணியாற்றி மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறந்த சமூக சேவையாளராக திகழ்ந்து வருவதுடன், மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகவும் கடமையாற்றி வருகின்றார்.

இவர் மட்டக்களப்பு, கல்லடி உப்போடையைச் சேர்ந்த திரு.திருமதி உதயகுமார் உதயரஜனி தம்பதியினரின் புதல்வருமாவார்.

# மேலதிக வகுப்புகளுக்கான கட்டண அதிகரிப்பை பிற்போட வேண்டும்

## தேசிய முஸ்லிம் கவுன்சிலின் தலைவர் வலீத் வேண்டுகோள்

(மாளிகைக்காடு நிருபர்)

பால்மா, எரிபொருட்கள், கோதுமைமா போன்றவற்றுக்கு நிகராக மேலதிக வகுப்புகளுக்கான (பாட) கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுக்கொண்டே செல்கின்றன. இவ்வதிகரிப்பினால் பல ஏழை பெற்றோர் மனம் வெதும்புகின்றார்கள். 03 இற்கு மேற்பட்ட பிள்ளைகள் உள்ள வீட்டின் நிலைமை மிகவும் வேதனைக்குரியதாகவுள்ளது.

பிள்ளைகளுக்கான காலை உணவு, பாடக் கட்டணம், போக்குவரத்துக் கொடுப்பனவு, கைச்செலவுக்கான தொகை என்பவற்றிற்காக அதிகமான பெற்றோர் கடுமையாக திண்டாடு கின்றார்கள். மனம் நொந்து வேதனைப் படுகின்றார்கள். எனவே, தயவுசெய்து மேலதிக வகுப்பகளுக்கான கட்டண அதிகரிப்பை சில காலங்களுக்கு பிற்போடுமாறு ஆசிரியர் சமூகத்தை அன்பாக வேண்டுகின்றேன் - என தேசிய முஸ்லிம் கவுன்சிலின் தலைவர் எம்.ஐ.எம்.வலீத் அறிக்கையொன்றினூடாக கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட் டுள்ளதாவது,

அவரது அறிக்கையில் மேலும் பல ஆசிரியர்கள் அக்கறையுடனும் இலவசமாகவும் இன்றும் சேவை நோக்குடன் கற்பித்தல் பணிகளில் பாடசாலைகளிலும், பிரத்தியேகமாகவும் ஈடுபடுகின்றார்கள். அவ்வாறானவர்களின்



செயற்பாடுகுள் பாராட்டத்தக்கதாகும்.

ஒரு சமூகத்தினது உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் காத்திரமான பங்களிப்பைச் செய்துவரும் அன்பான ஆசிரிய ஆசிரியைகள் தங்களிடம் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கல்வி அறிவூட்டுவது மட்டுமல்லாமல் வாழ்க்கையின் தத்துவத்தையும், உண்மை, நேர்மை, விட்டுக்கொடுப்பு, பிறருக்கு மாரியாதைசெய்தல் போன்ற வாழ்வியல் ஒழுக்கங்களை போதிப்பதிலும், வழிகாட்டுவதிலும் பெற்றோர்களை விடவும் ஆசிரியர் சமூகத்தின் வகிபாகம் என்றும் மதிக்கப்பட வேண்டியதும் நினைவு கூறப்படவேண்டியதுமாகும்.

ஆனாலும் நமது நாட்டில் அண்மைய வருடங்களாக கொரோனா மற்றும் பொருளாதாரப் பின்னடைவு என்பவற்றினால் பாதிக்கப்பட் டுள்ளவர்களில் கணிசமானோர் ஏழைகளும், நடுத்தர வர்க்கத்தினரும் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள் என்று நம்புகின்றேன். இருந்த போதிலும் இவ்வாறான நாட்டின் இக்கட்டான சூழ்நிலையிலும் கூட ஆசிரிய சமூகம் தங்களது போராட்டங்களினூடாக நீண்டகாலமாக வெல்லப்படாமலிருந்த தங்களது சம்பள அதிகரிப்பு போன்ற கோரிக்கைகளை வென்ற அரச உத்தியோக வகுதியினராக தங்களைக் கொள்ளலாம்.

ஆனாலும், ஆசிரியர்களுக்கு நடைமுறை ரீதியாக பல்வேறு விடுமுறைகளும் சலுகைகள் வழங்கப்படுவதோடு, கொரோணா தாக்கத்தினால் பாடசாலை நடைபெற்ற நாட்களைவிட நடைபெறாத நாட்களே மிக அதிகமாகும்.

அவ்வாறான சூழ்நிலைகளின்போதும் மேலதிக வகுப்புகளுக்கு எந்தத் தடையும் ஏற்பட்டதாக தெரியவில்லை. தற்போதும் கூட பாடசாலைகளில் முடிக்கக்கூடியதான பாட அலகுகள் பல வேண்டுமென்றே ஆசிரியர்களினால் அலைக்களிக்கப்பட்டு ரியூசன் வகுப்புக்கு வருமாறு மறைமுகமாக கட்டாயப்படுத்தப்படுகின்றார்கள்.

பாடசாலையில் ஒரு பாடவேளையான 40 நிமிடத்தில், 20 நிமிடங்களே கற்பித்தல் நடைபெறுகின்றது. பாடசாலைகளில் முடிக்கப்படக்கூடிய பாடவிதானங்கள் பல, ரியூசனை நோக்காகக்கொண்டு இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றது - என்று தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயற்சித்த 17 பேருக்கு விளக்கமறியல்

(கந்தளாய் நிருபர்)

சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக படகொன்றில் செல்ல முயற்சித்த 17 சந்தேக நபர்களை அடுத்த மாதம் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் இந்த வழக்கு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

சந்தேக நபர்கள் கடல்மார்க்கமாக அவுஸ்திரேலியாவுக்கு சென்றபோதே இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பொலிஸார் சந்தேக நபர்களை திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை துறைமுகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அமைதியான எங்களை போராட்டக்காரர்களாக மாற்றிவிடாதீர்கள்

## ஆலையடிவேம்பு பொதுமக்கள் எச்சரிக்கை





(ஆலையடிவேம்பு நிருபர்)

அமைதியாக இருக்கும் ஆலையடிவேம்பு மக்களை போராட்டக்காரர்களாக மாற்றி விடாதீர்கள் என நேற்று (21) தர்மசங்கரி மைதானத்தில் எரிவாயுவிற்காக காத்திருந்து ஏமாற்றமடைந்த பொதுமக்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

ஆலையடிவேம்பு தர்மசங்கரி மைதானத்தில் எரிவாயு வழங்கப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து நேற்று முன்தினம் அதிகாலை 3 மணிமுதல் அரச உத்தியோகத்தர்கள், அன்றாட தொழிலாளர்கள், பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் கர்ப்பிணிப் பெண்கள் என 500இற்கும் மேற்பட்ட மக்கள் ஒன்றுதிரண்டனர்.

அத்தோடு நீண்ட வரிசையில் எரிவாயு சிலிண்டர்களோடும் காத்திருந்தனர். ஒன்று கூடிய மக்கள் நண்பகல்வரை காத்திருந்து ஏமாற்றமடைந்தனர்.

எவ்வாறாயினும் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படாது எனும் தகவலையறிந்து மிகுந்த வேதனையோடு அவ்விடத்தை விட்டு நகராது காத்திருந்தனர். இதனால் குறித்த வீதியினுடான போக்குவரத்தும் தடைப்படும் நிலை உருவானது. இந்நிலையில், அங்கு வருகைதந்த அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவினர் குறித்த நிலை தொடர்பில் மக்களுக்கு எடுத்துரைத்து வீடுகளுக்கு செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கினர்.

இதனையடுத்து அங்கு குழுமியிருந்த பொதுமக்கள் கவலையடைந்த நிலையில் அரசாங்கத்தை திட்டித்தீர்த்து வெளியேறினர்.

அத்தோடு ஆலையடிவேம்பில் கடந்த இரு மாதங்களுக்கு மேலாக ளிவாயு சிலிண்டர்கள் விநியோகம் இடம்பெறவில்லை என்பதுடன், இதுபோன்ற இரு சம்பவங்கள் இதற்கு முன்னரும் இடம்பெற்றுள்ளதாக கூறினர்.

அயல் பிரதேசங்களில் வழங்கப்படும் எரிவாயு சிலிண்டர்கள் கூட ஆலையடி வேம்பில் வழங்கப்படவில்லை எனவும் ஆலையடிவேம்பு மக்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டனர். ஆகவே, எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படுவது தொடர்பில் முறையான அறிவித்தலொன்றை சம்பந்தப்பட்டவர்கள் முன்கூட்டி அறிவிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இதுவரையில் ஆலையடிவேம்பு மக்கள் அமைதியாகவே உள்ளதாகவும் தொடர்ந்து தமக்கு எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட வில்லையாயின் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொள்ளவேண்டிய நிலை உருவாகும் எனவும் சுட்டிக்காட்டினர்.

# மருதமுனை ஷம்ஸ் தேசிய பாடசாலையில் ஓ.எல். தின விழா



(பெரியநீலாவணை நிருபர்)

மருதமுனை ஷம்ஸ் தேசிய பாடசாலையின் சாதாரண தர மாணவர்களுக்கான ஓ.எல். தின நிகழ்வு அண்மையில் பாடசாலையின் மருதூர்க் கொத்தன் கலையரங்கத்தில் தேசிய பாடசாலையின் அதிபர் எம்.எம்.ஹிர்பகான் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவரும் பொறியியலாளருமான அல்-ஹாஜ் எம்.ரி.ஏ.பௌமி பிரதம அதிதியாகவும், கௌரவ அதிதியாக பாடசாலையின் பழைய மாணவியும் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் பேச்சு மற்றும் மொழி சிகிச்சையாளரும் விசேட அதிதியாக அல்-ஹிக்மா ஜூனியர் பாடசாலையின் அதிபர் எம்.எல். முஹம்மட் மஹ்றூப் கலந்துகொண்டனர்.

பாடசாலை மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் இங்கு அரங்கேற்றப்பட்டதுடன் ஓ.எல். தினத்தை முன்னிட்டு 'எழுகதிர்' எனும் சஞ்சிகையும் வெளியீட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.ஐ.சம்சுதீன், அல்-ஹாஜ் எம்.பி.ஏ ராஜி, உதவி அதிபர்களான திருமதி ஏ.ஆர்.என்.மன்பூஸா, எச்.எம்.நியாஸ் மற்றும்எம். எஸ்.பைலுல் ரஹ்மான், எம்.எஸ்.எம்.கியாஸ், ஈ.கமால்தீன் உட்பட பகுதித் தலைவர்கள், தரம் 11 மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள், விடுகை வருட மாணவர்கள், பாடசாலையின் நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# நரிப்புல்தோட்டம் மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் சிறப்பாக இடம்பெற்ற சங்காபிஷேகம்




(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேசத்தின் நரிப்புல்தோட்டம் கிராமத்தில் அமர்ந்து அருள் பாலித்துக்கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பஷ மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் கடந்த மாதம் 6ஆம் திகதி மிக சிறப்பாக நடைபெற்றது.



ஸ்ரீ மாணிக்க விநாயகருக்கு பாலாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து ஆயிரத்து எட்டு சங்காபிஷேகமும் வெள்ளிக்கிழமை கோலாகலமாக நடைபெற்றது.

பிரதேச மக்கள் நரசிங்க சுவாமி ஆலயத்திலிருந்து குடங்களில் பால் எடுத்து பால்குட பவனியாக மாணிக்க விநாயகர் ஆலயத்தை வந்தடைந்து விநாயகப் பெருமானுக்கு பாலாபிஷேகம் செய்தனர். இதனைத் தொடர்ந்து பிரதான கும்பங்கள் ஊர்வலமாக ஆலயத்தை சுற்றிவந்து மூலமூர்த்தியாகிய விநாயகருக்கு சிவாச்சாரியார் சிவஸ்ரீ நா. ஸ்ரீரங்கநாதக் குருக்களால் அபிஷேகம் செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இங்கு 1008 சங்குகளை கொண்டு விநாயகப் பெருமானுக்கு நாதஸ்வர மேள வாத்தியங்கள் முளங்க சங்காபிஷேகம் நடைபெற்றது

பிரதிஷ்டா பிரதமகுரு ஆச்சரியத்திலகம் சிவாச்சாரியார் சிவஸ்ரீ நா. ஸ்ரீ ரங்கநாதக் குருக்கள் தலைமையில் குருமார்களால் யாகங்கள், பூஜைகள், கிரியைகள் யாவும் மிகச்சிறப்பாக நிகழ்த்தப்பட்டன.

# போடியார் புலம்பல்!



**எரிபொருள் இல்லாட்டி வேலைக்கு போகத்தேவல்ல எண்டு விடுமுறை வழங்கிற பிரதமர் ரணில் ஐயா..**

**இனி திண்டுக்க சோத்துக்கு வழி இல்ல எண்டா ஒரு கிழமைக்கு சாப்பிடாம இருங்க எண்டு ரணில் ஓடர் போட்டாலும் போடுவார் போல..**

**நாட்டு ஜனாதிபதியும் நாட்டு பிரதமரும் நல்ல சாடிக்கு மூடிவாய்த்த மாதிரி எலுவா இருக்காங்க.**

# திருகோணமலையில் டெங்கின் வீரியம் அதிகரிப்பு!

## கடற்படைத்தளத்தில் 111 நோயாளர்கள் அடையாளம்



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் தாக்கம் அதிகரிக்கப் பட்டுள்ளதுடன், மொத்தமாக இந்த வருடம் 770 டெங்கு நோயாளர்கள் இணங் காணப்பட்டுள்ளனர். இதில் திருகோணமலை கடற்படைத்தளத்தில் 111 நோயாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் வீ.பிரேமானந் தெரிவித்தார்.

திருகோணமலையிலுள்ள சுகாதாரப் பணிமனையில் நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

டெங்கு வீரியம் அதிகரிப்பின் காரணமாக உயர் சிவப்பு வலயங்களாக திருகோணமலை, கிண்ணியா, மூதூர், உப்புவெளி, குச்சவெளி போன்ற சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இதில் கிண்ணியா சுகாதாரப் பிரிவில் ஆண் (வயது 38) ஒருவர் டெங்கு நோய் காரணமாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

திருகோணமலையில் 203 நோயாளர்களும், மூதூரில் 203, கிண்ணியாவில் 77, உப்புவெளியில் 76 என டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டுள்ள கடந்த வருடம் (2021) 312 என்றவாறு நோயாளர்கள் இனங்காணப்பட்ட நிலையை விடவும் இம் முறை அது 770 ஆக அதிகரித்துள்ளது இதனை கருத்திற்கொண்டு அரசாங்கம் டெங்கு வாரமாக மே 18 தொடக்கம் 24 வரை பிரகடனப்படுத்தியுள்ளது. சுகாதார தரப்புடன் முப்படையினர் இணைந்து டெங்கு ஒழிப்புப் பணி இடம்பெற்று வருகிறது .

இவ்வாறான கொடிய நோயிலிருந்து தம்மை பாதுகாக்க பொதுமக்கள் அவதானமாக செயற்படவேண்டும். தங்களது வீடுகள் காணிகளை சுத்தமாக வைத்திருக்கவும் பாவிக்காத மலசலகூடங்களை கவனமாக நீர் தேங்காத வண்ணம் சுத்தப்படுத்துவதுடன், வெற்றுக் காணிகளையும் உரிய நேரத்தினுள் சுத்தமாக பேணவும் அதுபோன்று பாடசாலைகள், அரச திணைக்களங்களில் தினசரி டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், சுத்தத்தைப் பேண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொதுமக்களை கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். பொதுமக்கள் காய்ச்சல் ஏற்படுமிடத்து உடனடியாக வைத்தியரை நாடவும் மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமாயின் இரத்த பரிசோதனையை மேற்கொள்ளவேண்டும். இதில் பொடுபோக்காக இருக்க வேண்டாம். சில பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு பணியின்போது லாவா குடம்பிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன .

இதில் அவதானமாக மக்கள் செயற்படவும் மீண்டும் மீண்டும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்படாது உடன் சட்ட நடவடிக்கைகளை இவ்வாறானவர்களுக்கு எதிராக மேற்கொள்வோம் - என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# உலக நீதிக்கான அமைப்பின் சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்ள குகதாசன் நெதர்லாந்துக்கு பயணம்

(மட்டக்களப்பு நிருபர்)



நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தராகவும், மட்டக்களப்பு சனசமூக மத்தியஸ்த சபையின் பிரதி தவிசாளராகவும் கடமையாற்றும் வீரச்சந்திரன் குகதாசன், உலக நீதிக்கான அமைப்பின் சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்வதற்குத் தெரிவுசெய்யப்பட்டு பயணமாகவுள்ளார்.

நீதியமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் மத்தியஸ்த சபை தவிசாளர்கள், சிரேஷ்ட மத்தியஸ்தர்களுக்கென கோரப்பட்டிருந்த விண்ணப்பத்தின் அடிப்படையில் நீதியை அணுகுதல், ஊழல் எதிர்ப்பு, சமவுரிமை, பாரபட்சமின்மை போன்ற நீதிசார் விடயங்களில் உலகளாவிய ரீதியில் சட்டவாட்சியை ஸ்திரப்படுத்த கொள்கையளவில் உதவும் அமைப்பான உலக நீதிக்கான அமைப்பின் ஒருங்கிணைப்புடன் பிரிட்டிஷ் கவுன்சில், செடார் அமைப்பின் அனுசரணையுடன் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை, அளிக்கையின் அடிப்படையில் 116 நாடுகளின் பிரதிநிதிகள் இதன்போது கலந்து கொள்கின்றனர். இம்மாநாடு எதிர்வரும் 29ஆம் திகதிமுதல் ஜூன் மாதம் 03ஆம் திகதிவரை ஹேக், தொர்லாந்தில் இடம்பெறவுள்ளது.

இவ்வாறு இலங்கையிலிருந்து இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் 8 பேரில் சிரேஷ்ட மத்தியஸ்தர்களில் ஒருவரான வீ.குகதாசன் மாத்திரமே தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

சனசமூக மத்தியஸ்த சபையின் வினைத்திறன்சார் அனுபவப் பகிர்வையும், அதனை மேம்படுத்து வதற்கான ஆலோசனைகளையும் தனக்கு வழங்கப்பட்டுள்ள கால அவகாசத்தில் அங்கு அவர் உரை ஒன்றையும் ஆற்றவுள்ளார் என்பதுடன். இது இலங்கை நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ள ஒரு விடயமுமாகும்.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், கிழக்கு பல்கலைக்கழக சமூகவியல் சிறப்பு பட்டதாரியும், சிறுவர் பாதுகாப்பு, உளவளத்துணை மற்றும் ஆங்கிலம், கணணி போன்ற துறைகளில் துறைசார் டிப்ளோமா கற்கைநெறிகளையும், தொழில்வாண்மைசார் பயிற்சிகளையும் பெற்றவர் என்பதுடன் சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி அமைச்சின் சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் அபிவிருத்திப் பரப்பில் சிரேஷ்ட முதுநிலை வளவாளருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கல்வி ஊக்குவிப்பிற்கான புலமைப்பரிசில் உதவிக்கான அங்குரார்ப்பண நிகழ்வு




(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு, கல்குடா கல்வி வலயத்திற் குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில் நன்றாக படிக்கக்கூடிய திறமை இருந்தும் பொருளாதார வசதி குறைவால் சிரமங்களை எதிர்நோக்கும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு தொகையாக விசேட புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் எல்.ஐ.எவ்.டி. நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினூடாக 2023ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரத்திற்கு தோற்றவுள்ள 20 மாணவர்கள் நன்மையடையவுள்ளனர்.

ஒரு விசேட புலமைப்பரிசில் பரீட்சை மூலம் இம் மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களது குடும்பப் பொருளாதார பின்னணி ஆராயப்பட்டு இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு மாணவருக்கும் விசேட வகுப்புகளுக்கு செல்வதற்காக சராசரியாக க.பொ.த. சாதாரண தர மாணவர் ஒருவருக்கு 6000 ரூபா வீதமும் க.பொ.த. உயர்தர மாணவர் ஒருவருக்கு 6500 ரூபா வீதமும் 24 மாதங்களுக்கு அவர்களது பிரத்தியேக வகுப்புத் தேவைகளுக்காக வழங்கப்படவுள்ளது.

கல்குடா வலயக்கல்வி அலுவலகத்துடன் இணைந்து செயற்படுத்தப்படவுள்ள இத்திட்டத்திற்கான நிதி மனித நேயம் நம்பிக்கை நிதியத்தால் (Manitha Neyam Trust) வழங்கப்பட்டது.

இரண்டு வருடகால திட்டத்திற்கான இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் வலயக்கல்வி அலுவலகம் சார்பில் கல்குடா வலயக்கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவியும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்துஷ்யந்தன் மற்றும் ஏனைய கல்விசார் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும் எல்.ஐ.எவ்.டி. நிறுவனம் சார்பில் நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி ஜானு முரளிதரன், நிதிப் பணிப்பாளர் ஜெபராஜ் நடராஜா திட்ட உத்தியோகத்தர் தயாநிதி, கள உத்தியோகத்தர் தனுக்ஷா துஷ்யந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன் இந்நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை சார்பில் அதிபர்கள், பிரதி அதிபர்கள், தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய வங்கியின் ஆளுநர், நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் அரசாங்க நிதி பற்றிய குழு முன்னிலையில் அழைப்பு




நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் குறித்து கலந்துரையாடுவதற்கு மத்திய வங்கியின் ஆளுநர், நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளை அடுத்தவாரம் அழைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் கடந்த வாரம் கூடிய அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், 1969ஆம் ஆண்டு 1ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட 2022.04.08ஆம் திகதிய 2274/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட 2022ஆம் ஆண்டு 06ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதி என்பன நிதி பற்றிய குழுவினால் அனுமதிக் கப்பட்டன.

இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்களை இறக்குமதி செய்வதற்கான செலவை உள்ளூர் கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதிக்கான பொருட்களுக்காக சேமிப்பது இந்த வர்த்தமானி அறிவித்தலின் நோக்கமாகும்.

இதற்கமைய தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற பொருட்களில் 369 பொருட்களுக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் ஒழுங்கு விதிகளை விதிக்கும் 2022.04.09 திகதிய 2274/42 இலக்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. 2022 ஏப்ரல் 10ஆம் திகதி அல்லது இதற்குப் பின்னர் கடல் மார்க்கமாக அல்லது ஆகாய மார்க்கமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு இந்த ஒழுங்குவிதி ஏற்புடையதாகும்.

கைக்கடிகாரங்கள் மற்றும் கடிகாரங்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், பால் உற்பத்திப் பொருட்கள், மதுசாரம், அழகுசாதனப் பொருட்கள், மெழுகு வர்த்திகள், விளக்குகள், பழங்கள், ரப்பர் உற்பத்திப் பொருட்கள் (டயர்கள் மற்றும் அழிப்பான்கள்), மின் சாதனங்கள் மற்றும் இலத்திரனியல் தயாரிப்புகளில் இதில் அதிகமாகக் காணப்படுவதுடன், மொத்த இறக்குமதியில் இவை 84 வீதமாகும். அதன்படி, இந்தப் பொருட்களின் இறக்குமதிக்காக கடந்த மூன்று வருடங்களில் ஒப்பீட்டளவில் செலவிடப்பட்ட 512 மில்லியன் அமெரிக்க டொலரில் கணிசமான அளவை உள்நாட்டுக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதியில் உள்ளடக்காமல் சேமிக்க முடியும் என்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கூட்டத்தில், அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நாடாளுமன்ற உறுப்பினர்களான இந்திக அனுருத்த, ஹர்ஷ டி சில்வா, முஜிபுர் ரஹ்மான், இசுரு தொடங்கொட, நளின் பெர்னாண்டோ, ரஞ்சித் பண்டார மற்றும் சுரேன் ராகவன் ஆகியோரும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வு






மினுவாங்கொடை கல்வி வலயத்திலுள்ள கல்லொழுவை அல் - அமான் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மாணவர்களுக்கு அனுமதி அட்டை வழங்கும் வைபவம் அல் - அமான் அதிபர் எம்.டீ.எம். ஆஸீம் தலைமையில் இடம்பெற்றது.

கல்லொழுவை ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவரும் நிழாமியா அரபிக் கல்லூரியின் ஸ்தாபகத் தலைவருமான அல்ஹாஜ் ஏ.எச்.எம். முனாஸ் மாணவர்களுக்கு அறிவுரைகளை வழங்கி அனுமதி அட்டைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் மினுவாங்கொடை கல்வி வலய தமிழ் மொழிமூல பாடசாலைகளின் கல்வி பணிப்பாளர் ஏ.ஏ.எம் ரிஸ்வி அல் - அமான் அதிபர் எம்.டீ.எம் ஆஸீம், பிரதி அதிபர் றிம்ஸான், பகுதித் தலைவர் சஸ்றீன், ஆசிரியர் அஷ்ஷேக் உபைதுல்லாஹ் ஆகியோரும் உரையாற்றினர். மேலும், அகில இலங்கை ஜம்இயத்துல் உலமாவின் மினுவாங்கொடை கிளை தலைவர் மௌலவி அஷ்ஷேக் பாஹிருதீன் (தீனி) விசேட துஆப் பிரார்த்தனை நடத்தினார்.

## மட்டக்களப்பில் 16,099 பேர் சாதாரண தரப் பரீட்சைக்கு தெரிவு



(மட்டக்களப்பு செய்தியாளர்)

இன்று ஆரம்பமாகவுள்ள கல்வி பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சைக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 16 ஆயிரத்து 99 பேர் தோற்றுவதாக மட்டக்களப்பு மாவட்ட பரீட்சைக்கு பொறுப்பான கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரன் தெரிவித்தார்.

அந்த மாவட்டத்தில் 125 பரீட்சை நிலையங்களும் 14 இணைப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கல்குடா, மட்டக்களப்பு, மட்டக்களப்பு மத்தி, மண்முனை மேற்கு, பட்டிருப்பு ஆகிய ஐந்து கல்வி வலயங்களிலும் குறித்த பரீட்சைக்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் கல்வி பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## எரிகாயங்களுடன் மீட்கப்பட்ட வயோதிபப் பெண் உயிரிழப்பு

### பெருக்குவற்றான் பகுதியில் சம்பவம்

(ரஸீன் ரஸ்மின்)



முந்தல் - பெருக்குவற்றான் கிராம சேவகர் பிரிவு உட்பட்ட பகுதியில் உள்ள தோட்டமொன்றில் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிபப் பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெருக்குவற்றான் கிராம சேவகர் பிரிவில் உள்ள தனியாருக்குச் சொந்தமான தென்னந்தோட்டம் ஒன்றில் தங்கியிருந்த 67 வயதுடைய முந்தல் பகுதியைச் சேர்ந்த வயோதிபப் பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

முந்தல் பகுதியைச் சேர்ந்த வயோதிப தம்பதியினர், முந்தல் - பெருக்குவற்றான் கிராம சேவகர் பிரிவில் உள்ள தனியாருக்கு சொந்தமான தென்னந்தோட்டம் ஒன்றில் வசித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், குறித்த தினத்தன்று காலை குறித்த வயோதிபப் பெண் சமையலறையில் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்த போது திடீரென அவரது உடலில் தீப் பரவியுள்ளதாக கூறப்படுகிறது.

இதனையடுத்து, தீப்பரவலுக்குள்ளாகிய நிலையில் இருந்த குறித்த வயோதிபப் பெண்ணை அங்கிருந்தவர்கள் உடனடியாக கொத்தாந்தீவு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளபோதிலும், அங்கிருந்து அவர் மேலதிக சிகிச்சைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவ்வாறு புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதிலும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் கூறினர்.

இந்த சம்பவம் தொடர்பில் உடப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதன் பின்னர் சம்பவ இடத்திற்கு சென்ற உடப்பு பொலிஸாரும், பொலிஸ் தடயவியல் பிரிவினரும் இணைந்து முதற்கட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்த வயோதிபப் பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உடப்பு பொலிஸார் இந்த தீ விபத்து சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ‘மலையக அரசியல்: தலைமைகளும் தளபதிகளும்’ நூல் வெளியீட்டு விழா லண்டனில்




மூத்த தொழிற்சங்கவாதியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. வேலுப்பிள்ளை 1958 களில் 'மலைநாட்டு தமிழ் மக்கள் தலைவர்கள்' என்ற தலைப்பில் நடேசஐயர், அப்துல் அஸீஸ், எஸ்.தொண்டமான், ஜோர்ஜ் ஆர். மோத்தா, பெரிசுந்தரம், கே.இராஜலிங்கம், ஐ.எக்ஸ்.பெரேரா, எஸ்.பி.வைத்திலிங்கம், குஞ்சுப் பொரிசண்முகம், ஏ.எஸ்.ஜோன், டி. சாரநாதன், சி.எஸ்.சிவனடியான் ஆகியோர் பற்றி எழுதிய கட்டுரைகளையும், மலைநாட்டு தமிழ் மக்கள் உரிமைப் போர்த்தளபதிகள் என்ற தலைப்பில் எஸ்.எம்.சுப்பையா, எஸ்.செல்லையா, கே.குமாரவேல், வி.கே.வெள்ளையன், டி.இராமானுஜம், சிவபாக்கியம் குமாரவேல், பி.தேவராஜ், கோகிலம் சுப்பையா, போஸ் (ஆர்.எம்.) செல்லையா, எஸ்.நடேசன், கே.சுப்பையா, கே.ஜி.எஸ்.நாயர், எஸ்.மாரியப்பா, எஸ்.சோமசுந்தரம் ஆகியோர் பற்றி எழுதிய கட்டுரைகளையும் சேர்த்து 'மலையக அரசியல்; தலைவர்களும் தளபதிகளும்' என்ற தலைப்பில் மு. நித்தியானந்தன், எச். எச். விக்கிரமசிங்க ஆகிய இருவரும் தொகுத்து வெளியிடுகின்றனர். சி.வியின் இந்த புதிய வரலாற்று ஆவணத்தின் வெளியீட்டு விழா லண்டன் மலையக இலக்கிய மாநாட்டில் ஜூன் 11ஆம் திகதி நடைபெறும். மலையக எழுத்தாளர்களும் சமூக செயற்பாட்டாளர்களுமான சி.வி. வேலுப்பிள்ளை, கோகிலம் சுப்பையா, இர. சிவலிங்கம், கவிஞர் தமிழோவியன், சாரல் நாடன், பேராசிரியர் சோ. சந்திர சேகரன், காத்தாயி ஆகிய ஏழு அரங்குகளில் 25 மலையக எழுத்தாளர்களின் நூல்களின் விமர்சனங்களும் இந்த மாநாட்டில் இடம்பெறவுள்ளது. சென்னை தாய் பதிப்பகம் வெளியீட்டின் சார்பில் குமார் ராஜேந்திரன் இந்நூலை பதிப்பிட்டுள்ளார்.

## கிழக்கு ஆளுநராக ஹசன் அலியை கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்டத்தில் பகீரத முயற்சி

சுகாதாரத்துறை முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம். ரி. ஹசன் அலியை கிழக்கு மாகாண ஆளுநராக கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் மட்டத்தில் பகீரத முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிகின்றது.

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க இதற்கான முயற்சிகள், முன்னெடுப்புகள் ஆகியவற்றை மிகவும் நுட்பமான முறையில் முன்னெடுக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஹசன் அலியை கிழக்கு மாகாண ஆளுநராக கொண்டு வர வேண்டும் என்கிற யோசனையை பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் மேலான கவனத்துக்கு ரவி கருணாநாயக்க கடந்த நாட்களில் சமர்ப்பித்துள்ளார் என்று அறிய கிடைக்கின்றது.

ஊடகவியலாளர்கள் இது தொடர்பாக ஹசன் அலியை தொடர்புகொண்டு கேட்டபோது ஆளுநர் போன்ற உயர்பதவிகளுக்கு தகுதியானவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பது பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என்றார்.





பதுளை சர்வமத ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பசறை நகர பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் நகரில் காணப்படும் குப்பைக் கூளங்களை அகற்றுவதற்கான சிரமதான நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் பசறை பிரதேச பொலிஸார் மற்றும் பிரதேச சபை அதிகாரிகள் மற்றும் வைத்தியசாலை அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படப்பிடிப்பு: ஆர். சுரேஷ்குமார்)

## அண்ணனின் மெய்யறிவும்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி...)

2015 தேர்தல் தோல்வியில் இருந்து ராஜபக்ஷக்கள் பாடங்களை கற்றுக்கொள்ளவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தின் மீது வெறுப்படைந்த மக்கள் 2019/2020 தேர்தல்களில் தங்களை மீண்டும் தெரிவுசெய்ததையடுத்து ராஜபக்ஷக்கள் கர்வத்தனமானவர்களாக மாறினார்கள். அவர்களது தற்போதைய ஆட்சி 2005 - 2015 மஹிந்த ஆட்சியின் ஒரு மீள்சுழற்சியாகவே அமைந்தது. 2015 ஆண்டு மஹிந்த மூன்றாவது பதவிக்காலத்துக்கு ஜனாதிபதியாக தெரிவாகியிருந்தால் இன்றையதைப் போன்ற சூழ்நிலையையே ராஜபக்ஷக்கள் எதிர்நோக்கியிருப்பார்கள்.

மஹிந்த மீதான சமலின் கடிந்துரையை முழுமையாக ஏற்றுக்கொள்ளாமல் இருக்கமுடியவில்லை என்றாலும் அது காலந்தாழ்த்தியதாகவே இருக்கிறது. ஜனாதிபதியின் பதவிக்காலங்களுக்கு இருந்த வரையறையை இல்லாதொழித்த அரசியலமைப்புக்கான 18ஆவது திருத்தத்தை மஹிந்த கொண்டுவந்தபோது அதை சமல் தடுத்திருக்க வேண்டும். அந்த நேரத்தில் அவர் நாடாளுமன்ற சபாநாயகராக இருந்தார். அந்த 18ஆவது திருத்தம் ராஜபக்ஷ குடும்பத்துக்கு மாத்திரமல்ல முழுநாட்டுக்குமே பெரும் சாபக்கேடாக மாறியது.

18ஆவது திருத்தத்தைப் போன்றே எதேச்சாதிகாரமான 20ஆவது திருத்தத்தை அவரது இன்னொரு தம்பியாரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொண்டுவந்தபோது அதை தடுப்பதற்கு சமல் அக்கறையுடனான முயற்சியை எடுத்திருக்க வேண்டும். இன்று ஆர்ப்பாட்டம் செய்யும் மக்களின் நெருக்குதல்களுக்கு பணிந்து 20ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைப்பதற்கும் கோட்டாபய தயாராவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அனுபவமுடைய ஒரு மூத்த அரசியல்வாதி என்ற வகையில் சமல், அவரின் இன்னொரு தம்பியாரான பெசில் ராஜபக்ஷ நிதியமைச்சராக நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்திருக்க வேண்டும். நிதியமைச்சரின் கடமைகளைச் செய்வதற்கு ஒருவர் நிபுணத்துவம் வாய்ந்தவராக இருக்க வேண்டும். அறிவும் அனுபவமும் உடைய ஒருவர், நிதியமைச்சராக நியமிக்கப்பட்டு மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சின் நிபுணர்களின் உதவியுடன் அவர் சுதந்திரமாக பொருளாதார நெருக்கடியை கையாள்வதற்கு அனுமதிக் கப்பட்டிருந்தால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருக்காது. ராஜபக்ஷக்களும் பாதுகாப்பாக இருந்திருப்பார்கள்.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் சிலரின் உதவியுடன் நாட்டை நிருவகிக்கமுடியும் என்று நினைத்த ஜனாதிபதி கோட்டாபயவுக்கு சமல் நல்வழியைக் காட்டியிருக்கவேண்டும். இந்த இராணுவ அதிகாரிகளின் பரிதாபகரமான செயற்பாடுகளை நோக்கும்போது உலகிலேயே மிகவும் பயங்கரமான இயக்கம் என்று வர்ணிக்கப்பட்ட விடுதலைப் புலிகளை எவ்வாறு இவர்கள் தோற்கடித்தார்கள் என்று வியக்கவேண்டியிருக்கிறது. கோட்டாபயவுக்கு பின்னால் அணிதிரண்டு 2019 ஜனாதிபதி தேர்தலில் அவரது வெற்றியைச் சாத்தியமாக்கிய அறிவுஜீவிகள் என்று சொல்லப்படுவோர் இன்று இகழ்ச்சிக்குள்ளாகியிருக்கிறார்கள். இன்றைய ஜனாதிபதியையும் சமல் கடிந்துரைத்தாரா?

ராஜபக்ஷ குடும்பம் அதிகாரத்தின் மீதான தங்கள் பிடியை தொடர்ந்தும் வைத்திருப் பதற்கான முயற்சிகளை கைவிடவில்லை. நாடாளுமன்றத்தில் எம்.பிக்களின் எண்ணிக்கையுடன் அவர்கள் விளையாடுவதையும் போட்டிக்கட்சிகள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளையும் பார்க்கும்போது இதை விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

ராஜபக்ஷ குடும்பம் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக நியமித்துவிட்டு ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அதிருப்தியாளர் குழுவில் இருந்து எம்.பி.க்களை கட்சி மாறத்தூண்டிக்கொண்டிருக்கிறது. ஆனால், பணத்தைக்காட்டி கட்சி மாறல்களைத் தூண்டுவதல்ல மக்களின் அபிப்பிராயமே முக்கியமானது. அந்த அபிப்பிராயம் ராஜபக்ஷக்களுக்கு அனுகூலமானதாக இல்லை என்பது வெளிப்படையானது.

(த ஐலண்ட் ஆசிரிய தலையங்கம்,21மே 2022)

# 12 நாடுகளில் 80 பேருக்கு குரங்கு அம்மை தொற்று



ஐரோப்பிய நாடுகளில் வேகமாகப் பரவிவரும் குரங்கு அம்மை நோய்த் தொற்று சின்னம்மைபோல் இருப்பினும் பாதிப்பு குறைவாகவே உள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவசர ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டிய உலக சுகாதார அமைப்பு அமெரிக்கா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட 12 நாடுகளில் 80 பேருக்கு குரங்கு அம்மை தொற்று பாதிப்பு உறுதிசெய்யப்பட்டிருப்பதாக அறிவித்துள்ளது.

எனினும், இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் தொற்று வேகமாகப் பரவலாம் என்றும் உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவக்கூடிய நோயாக இது கருதப்படுகிறது. ஆபிரிக்காவில் மட்டும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் மக்களுக்கு இந்த நோய் பரவிவந்த நிலையில், ஐரோப்பிய நாடுகளில் இப்போது அதிகளவில் பரவிக்கொண்டிருக்கிறது.

**இஸ்ரேலிலும் ஒருவருக்கு பாதிப்பு**

இந்நிலையில், இஸ்ரேலிலும் ஒருவருக்கு குரங்கு அம்மை பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மேற்கத்திய ஐரோப்பாவுக்கு சென்று அங்கு குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்ட ஒருவரை பார்த்துவிட்டு திரும்பிய 30 வயதுடைய நபருக்கு பாதிப்பு உறுதிசெய்யப்பட்டிருப்பதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

அறிகுறிகள் இருந்ததன்பேரில் டெல் அவிவ் நகரிலுள்ள வைத்தியசாலையில் பரிசோதனை செய்தபோது அவருக்கு பாதிப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

# அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமராக அந்தனி அல்பனீஷ் தெரிவு



அவுஸ்திரேலியாவின் 31ஆவது புதிய பிரதமராக தொழிலாளர் கட்சியின் தலைவர் அந்தனி அல்பனீஷ் ஆட்சியமைக்கவுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆளும் தாராளவாத தேசிய கூட்டணி போதிய இடங்களைப் பெறத் தவறியதைத் தொடர்ந்து, எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியின் தலைவர் அந்தனி அல்பனீஷ் (Anthony Albanese) புதிய பிரதமராகிறார்.

அவுஸ்திரேலியாவின் 47ஆவது நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில், தற்போதைய பிரதமர் ஸ்கொட் மொரிசனின் (Scott Morrison) லிபரல் மற்றும் தேசியக் கூட்டணி, லேபர் கட்சி, கிரீன்ஸ் கட்சி உள்ளிட்டவை போட்டியிட்டன.

151 இடங்களைக்கொண்ட நாடாளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் ஆளும் தாராளவாத தேசிய கூட்டணி 51 இடங்களை மட்டுமே கைப்பற்றியது.

எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி 72 இடங்களை வென்ற நிலையில், பெரும்பான்மைக்கு 4 இடங்கள் மட்டும் தேவை என்பதால், அக்கட்சி ஆட்சியமைக்கும் சூழலுள்ளது.

இந்நிலையில், அந்தனி அல்பனீஷுக்கும் அவரது புதிய அரசுக்கும் வாழ்த்து தெரிவிப்பதாக ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

**புதிய பிரதமரின் பின்னணி...**

அவுஸ்திரேலியாவின் 31ஆவது பிரதமராகப் பொறுப்பேற்கவிருக்கும் அந்தனி அல்பனீஷ், 1963ஆம் ஆண்டில் பிறந்தவர். கடந்த 1996ஆம் ஆண்டுமுதல் கிரேண்டல் தொகுதி



நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வரும் இவர் தொழிலாளர் கட்சித் தலைவராக கடந்த 2019ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்டார்.

ஏற்கனவே, 2013ஆம் ஆண்டில் கெவின் ருட் தலைமையிலான அரசில் துணைப் பிரதமராகவும் அதற்கு முந்தைய தொழிலாளர் கட்சி அரசுகளில் கெபினட் அமைச்சராகவும் அந்தனி அல்பனீஷ் பொறுப்பு வகித்துள்ளார்.

தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து பேசிய அவர், அவுஸ்திரேலியாவை புதுப்பிக்கத்தக்க எரிபொருள்துறை வல்லரசாக்கவிருப்பதாக உறுதியளித்தார். பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் கரியமிலவாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாகக் கூறிய அவர், நிலக்கரி சுரங்கங்களை மூடுவது குறித்து எதுவும் குறிப்பிடவில்லை.

# கேன்ஸ் திரைப்பட விழாவில் அழகு பதுமையாக ஐஸ்வர்யா



பிரான்ஸில் நடைபெற்றுவரும் கேன்ஸ் திரைப்பட விழாவில் இந்தியாவிலிருந்து பல்வேறு முன்னணி நாயகர்கள் மற்றும் நாயகிகள் பங்கேற்றனர்.

இதில் முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய் சிவப்பு கம்பளத்தில் அழகு பதுமையாக ஒய்யார நடைபோட்டு அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.

**ஆடையை தொலைத்த பூஜா**

தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகையும். பீஸ்ட் படத்தின் நாயகியுமான பூஜா ஹெக்டே முதன்முறையாக இந்த விழாவில் கலந்துகொண்டார்.

பார்வையாளர்களை கவரும் வகையிலான ஆடை மற்றும் நகைகள் அணிந்து பங்கேற்ற பூஜாவுக்கு அடுத்த சில நொடிகளில் அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது.

அவரது அழகுசாதனப்பொருட்கள், மாற்று உடை மற்றும் விலை உயர்ந்த ஆடைகள் வைக்கப்பட்டிருந்த சூட்கேஸ் ஒன்று மாயமானது. இதனை கண்டுபிடிப்பதற்காக காலைமுதல் இரவுவரை தேடிய பூஜா ஹெக்டேவின் சிகை அலங்கார நிபுணர் மயங்கி விழும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

பூஜா ஹெக்டேவும் காலை மதியம் சாப்பிடாமல் இனி சூட்கேஸ் கிடைக்க வாய்ப்பில்லை என்று தெரிந்து நொந்துபோனதால் தனக்குத்தானே ஆறுதல் கூறிக்கொண்டு இரவு தான் சாப்பிட்டதாக தெரிவித்தார்.

கேன்ஸ் திரைப்பட விழாவில் கெமரா முன்பு கெத்தாக போஸ் கொடுத்துவிட்டு, சூட்கேஸை பறிகொடுத்ததால் மாற்று உடையின்றி தவித்த நிகழ்வால் பூஜா ஹெக்டேவும், அவருடன் சென்றவர்களும் அன்றைய நாள் முழுக்க பதற்றத்துடனே இருந்துள்ளனர்.

அதிர்ஷ்டவசமாக எடுத்துச்சென்ற தங்க வைர நகைகள் அனைத்தையும் அணிந்துகொண்டதால் அவை தப்பியது என்று பூஜா ஹெக்டே நிம்மதிப் பெருமூச்சு விட்டுள்ளார்.

**அரைநிர்வாணமாக ஆர்ப்பாட்டம்**

பிரான்ஸில் நடைபெற்ற 75ஆவது கேன்ஸ் (Cannes) திரைப்பட விழாவுக்கு வந்த பெண் போராட்டக்காரர் ஒருவர் உடலில் உக்ரைன் கொடியின் வண்ணம் தீட்டி முழக்கமிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

''எங்களை பலாத்காரம் செய்வதை நிறுத்துங்கள்'' என்ற கோஷத்துடன் தனது ஆடையைக் கழற்றி வீசிய அந்தப் பெண் உக்ரைன் வண்ணங்களுடன் அரை நிர்வாணமாக நின்றார். அவர் உடலில் கைகள் படருவதுபோல் சித்திரங்கள் தீட்டப்பட்டிருந்தன. உடனடியாக அதிகாரிகள் அவரை சூழ்ந்து ஆடையைப் போர்த்தி அங்கிருந்து அழைத்துச்சென்றனர். இச்சம்பவத்தால் பார்வையாளர்கள் அதிர்ச்சியில் உறைந்து நின்றனர்.

# பைடன் உட்பட 963 அமெரிக்கர்கள் ரஷ்யாவுக்குள் நுழையத் தடை



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உட்பட 963 அமெரிக்கர்கள் ரஷ்யாவுக்குள் நுழைய அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

ரஷ்ய வெளியுறவுத்துறை இணையத்தள பக்கத்தில் தடை விதிக்கப்பட்டவர்களின் பெயர்களை வெளியிட்டுள்ள வெளியுறவுத்துறை அமைச்சு, உக்ரைன் போரை தொடர்ந்து அமெரிக்கா எடுத்த விரோத நடவடிக்கைகள் அந்நாட்டுக்கு எதிராகவே திரும்பியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

**உக்ரைனுக்கு 4000 கோடி டொலர் நிதியுதவி**

ரஷ்ய இராணுவத்தை எதிர்த்துப் போரிட உக்ரைனுக்கு உதவ நாலாயிரம் கோடி டொலர் வழங்குவதற்கான மசோதாவில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கையொப்பமிட்டுள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்ய இராணுவம் தாக்குதலைத் தொடங்கியதில் இருந்தே, அதை எதிர்கொண்டு முறியடிக்க அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் ஆயுதங்கள், இராணுவத் தளவாடங்களை உக்ரைனுக்கு வழங்கி வருகின்றன. அதன் ஒருபகுதியாக உக்ரைனின் படை வலிமையை அதிகரிக்க நாலாயிரம் கோடி டொலர் வழங்கும் மசோதாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஒப்புதல் அளித்துள்ளார்.

# 140 மைல் வேகத்தில் வீசிய கடும் சூறாவளி: அமெரிக்காவில் 2 பேர் பலி; 44 பேர் காயம்







அமெரிக்காவின் Michigan மாகாணத்தில் Gaylord பகுதியில் சூறாவளி தாக்கியதில் 2 பேர் உயிரிழந்தனர். 44பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும் Gaylord பகுதியில் சூறாவளிக்குப் பின்னர் எடுக்கப்பட்ட வீடியோவில் மரங்கள் தீப்பிடித்து எரியும் காட்சி பதிவாகியுள்ளது.

மணிக்கு 140மைல் வேகத்தில் சூறாவளி வீசியதாக தேசிய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# சிரிய இராணுவத்தளங்களை குறிவைத்து இஸ்ரேல்

## ஏவுகணைத் தாக்குதல்; 3 பேர் பலி



சிரியா தலைநகர் டமாஸ்கஸ் அருகே இராணுவத்தளங்களை குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் நிகழ்த்திய ஏவுகணைத் தாக்குதல்களில் 3 பேர் உயிரிழந்தனர்.

இஸ்ரேல் கட்டுப்பாட்டிலிருக்கும் கோலான் மலைப்பகுதியிலிருந்து, டமாஸ்கஸிலுள்ள ஆயுதக் கிடங்கை குறிவைத்து இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது.

இதில் டமாஸ்கஸ் விமான நிலையத்தின் அருகிலிருந்த கட்டடம் தீப்பற்றி எரிந்ததாக சிரியா இராணுவம் தெரிவித்துள்ளது.

# உலக செய்திகள்

# லட்சத்தீவு கடல் பகுதியில் ரூ.1,526 கோடி ஹெரோயின் பறிமுதல்

லட்சத்தீவு கடல் பகுதியில் 2 படகுகளில் கடத்திவரப்பட்ட 218 கிலோ ஹெரோயினை இந்திய வருவாய் புலனாய்வு இயக்குனரகம் மற்றும் கடலோர காவல்படை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

லட்சத்தீவு கடல் பகுதியில் படகு மூலம் ஹெரோயின் கடத்தல் இடம்பெறுவதாக மத்திய வருவாய் புலனாய்வு இயக்குனரகத்துக்கு கிடைத்த தகவலுக்கமைய கடலோர காவல் படையுடன் இணைந்து மேற்கொண்ட 'ஆப்ரேஷன் கோஜ்பீன்' சுற்றிவளைப்பில் 18ஆம் திகதி 2 படகுகளை இடைமறித்து சோதனையிட்டனர்.

அந்தப் படகுகளில் 218 கிலோ எடையில் முதல் தர ஹெரோயின் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றை பறிமுதல் செய்த அதிகாரிகள், மேல் விசாரணைக்காக படகுகளையும், அதில் இருந்தவர்களையும் கொச்சிக்கு அழைத்துச் சென்றனர். ஆழ்கடல் பகுதியில் இந்த ஹெரோயின் போதைப்பொருட்களை பெற்றதாக படகில் வந்தவர்கள் தெரிவித்தனர். இந்த ஹெரோயினின் மதிப்பு, சர்வதேச சந்தையில் ரூ.1,526 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாதமாக பறிமுதல் செய்யப்பட்டுவரும் போதைப்பொருட்களில், இது நான்காவது பெரிய பறிமுதல் என்பது குறிப்பிடத்தக்கது.



# இலங்கைக்கு உதவிய இந்திய அரசுக்கும், நிவாரணப் பொருட்கள் அனுப்பிய தமிழக முதலமைச்சருக்கும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணன் நன்றி

**திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது**

இலங்கைக்கு உதவும் இந்திய அரசுக்கும், நிவாரணப் பொருட்கள் அனுப்பிய தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே.ராதாகிருஷ்ணன் நன்றி தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டம் துறையூர் அருகே பெருமாள்மலை அடிவாரத்திலுள்ள குலதெய்வமான பிச்சாயி அம்மன் கோயிலில் சனிக்கிழமை மலையக மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவுத் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இராதாகிருஷ்ணன் வழிபட்டார். பின்னர் அவருக்கு சிறப்பு அபிஷேகமும் நடைபெற்றது.

இதனையடுத்து மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணன் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

இந்தியா இல்லாவிட்டால் இலங்கையின் நிலை மிகமிக மோசமாகியிருக்கும். அடிப்படைத் தேவைகளுக்குகூட மக்கள் நீண்டவரிசையில் பல மணிநேரம் காத்திருக்கிறார்கள். பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் ஸ்திரமற்ற அரசை உலக நாடுகள் கவனிக்கின்றன. அவரால் நீடித்த, உறுதியான அரசை ஏற்படுத்த முடியாது. தமிழ் எம்.பிக்கள் 25 பேரும் அரசின் மீது



நம்பிக்கை இழந்துள்ளோம். நிகழாண்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்ச்சியில் சிங்களவர்கள் தமிழர்களுடன் சேர்ந்து பங்கேற்றனர். இனி வேற்றுமை பார்க்காமல் ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டும். பேறிவாளனை விடுவித்ததை வரவேற்கிறேன்.

தற்போது இலங்கையில் அசாதாரண சூழ்நிலையில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டு, அரசியலில் சீரமைப்பு இல்லாமல் காணப்படுகிறது. ராஜபக்ஷ குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக ரணில் விக்ரசிங்க பிரதமர் பதவி ஏற்றுள்ளதாக கேள்வி எழுகிறது. கச்சதீவை பொறுத்தளவில் இந்திய அரசியவாதிகள் பேசினாலும் கூட இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறுவார்களா என்ற சந்தேகம் எங்களுக்கு எழுகின்றது. கச்சதீவு பிரச்சினையில் ஒருசாரார் தரப்பில் நடவடிக்கை இருந்தால் அது தவறான நடவடிக்கை. இருசாராரும் சேர்ந்து நடவடிக்கை எடுப்பதே சிறந்தது.

எது எப்படியிருந்தாலும் இரு நாடுகளும் இன்று உடன்பட்டு செய்யவேண்டிய பல வேலைகள் இருக்கின்றன. ஏனென்றால், இந்தியாதான் இலங்கைக்கு அதிகமான உதவிகள் செய்த நாடாக கருதுகிறோம். இந்தியாவின் உதவிகள்தான் இலங்கைக்கு மிக அத்தியாவசியமாக இருக்கின்றன. ஆகவே, இந்தியாவை ஒருபோதும் மறக்க முடியாது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும், அவரது அரசாங்கத்தையும் பாராட்டுகிறோம். அதேநேரத்தில் தமிழக அரசும் இலங்கைக்கு பல்வேறு உதவிகளை செய்துவருகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் வேண்டுகோளுக்கிணங்க தமிழக மக்களும் உதவிசெய்து வருகின்றனர். அவர்களையும் பாராட்டுகிறோம். பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் வரவில்லை. குறிப்பிட்ட கட்சியின் அழைப்பின்பேரில் வந்திருந்தார். தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை இலங்கைக்கு வந்து சென்றமை குறித்து பிரதமர் நரேந்திர மோடிக்கு தெரியப்படுத்துவார் என்ற நம்பிக்கையுள்ளது.'' - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஆரம்பமானது பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ்




ஆண்டின் இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் தொடரான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடர் நேற்று பிரான்ஸ் தலைநகர் பரிஸில் ஆரம்பமானது. களிமண் தரையில் நடைபெறும் போட்டியான பிரெஞ்ச் ஓபனில் ரபெல் நடால் (ஸ்பெயின்) ஆதிக்கம் செலுத்தி வருகிறார்.

2005ஆம் ஆண்டு பிரெஞ்ச் ஓபனில் அறிமுகமான நடால் இதுவரை அந்தப் போட்டியில் 105 ஆட்டங்களில் வெற்றிபெற்று சாதனை படைத்துள்ளார். 3 ஆட்டங்களில் மட்டுமே தோல்வியை சந்தித்திருக்கிறார். பிரெஞ்ச் ஓபனை 13 முறை வென்றிருக்கும் நடால், கடந்த ஜனவரி மாதம் நடந்த அவுஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்றதன் மூலம் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), ஜோகோவிச் (செர்பியா) ஆகியோரை (இருவரும் தலா 20 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ளனர்) பின்னுக்குத் தள்ளி மொத்தம் 21 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களுடன் முதலிடத்தில் இருக்கிறார்.

களிமண் தரை போட்டியில் மன்னன் என்று வர்ணிக்கப்படும் நடால் தனது வெற்றிப் பயணத்தை தொடரும் ஆர்வத்தில் உள்ளார். அவர் தனது முதலாவது சுற்று ஆட்டத்தில் அவுஸ்திரேலிய வீரர் ஜோர்டன் தாம்சனை சந்திக்கிறார். நடப்பு சம்பியனும், நம்பர் வன் வீரருமான நோவக் ஜோகோவிச் கொரோனா தடுப்பூசி போடாத காரணத்தால் அவுஸ்திரேலியாவுக்குள் நுழையவிடாமல் திருப்பியனுப்பப்பட்டதால் இந்த ஆண்டு தொடக்கத்தில் நடந்த அவுஸ்திரேலிய ஓபன் போட்டியில் பங்கேற்க முடியாமல் போனது.

அவர் அண்மையில் நடந்த இத்தாலி ஓபன் போட்டியில் சம்பியன் பட்டம் வென்று நல்ல உத்வேகத்துடன் உள்ளார். அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றிருக்கும் நடாலின் சாதனையை சமன் செய்ய ஜோகோவிச் வரிந்து கட்டுவார் என்பதில் சந்தேகமில்லை. அவர் தனது முதல் சுற்று ஆட்டத்தில் ஜப்பான் வீரர் யோஷிஹிடோ நிஷிகாவை எதிர்கொள்கிறார்.




மொத்த பரிசுத் தொகை ரூ.358 கோடியாகும். இதில் ஒற்றையர் பிரிவில் பட்டம் வெல்பவர்களுக்கு ரூ.17¾ கோடி வழங்கப்படும். 2ஆவது இடம்பெறுபவர்களுக்கு ரூ. 8¾ கோடி கிடைக்கும். இரட்டையர் பிரிவில் பட்டம் வெல்பவர்களுக்கு ரூ. 5½ கோடி பரிசாக கிட்டும்.

# மும்பையின் வெற்றியால் ப்ளேஓப் நுழைந்த ஆர்.சி.பி.




டெல்லி கெப்பிட்டல்ஸ் அணியுடனான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி இறுதி ஓவரில் வெற்றிபெற்ற நிலையில், அந்த வெற்றியால் பாப் டு பிளெஸிஸ் தலைமையிலான ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி நான்காவது அணியாக ப்ளேஓப் சுற்றுக்கு தகுதிபெற்றது.

நேற்று முன்தினம் நடந்த 69ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - டெல்லி கெப்பிட்டல்ஸ் அணிகள் மோதின. இப்போட்டியில் வெற்றிபெற்றால் மட்டுமே ப்ளேஓப் சுற்றுக்குள் நுழைய முடியும் என்ற நெருக்கடியுடன் டெல்லி அணி களமிறங்கியது. இப்போட்டியில் டெல்லி தோல்வியடைந்தால் 16 புள்ளிகள் பெற்றிருந்த பெங்களூர் அணி ப்ளேஓப் சுற்றுக்குள் நுழையும். இதனால், இந்த ஆட்டம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணி பந்து வீச்சை தெரிவுசெய்தது. இதன்படி, முதலில் பேட்டிங் செய்த டெல்லி அணி 7 விக்கெட் இழப்பிற்கு 159 ஓட்டங்கள் எடுத்துள்ளது. இதனைத் தொடர்ந்து 160 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை இந்தியன்ஸ் அணி களமிறங்கியது. ஏற்கனவே, ப்ளேஓப் சுற்றுக்கு தகுதி பெறும் வாய்ப்பை இழந்த மும்பை அணி எந்தவித அழுத்தமுமின்றி இலக்கை நோக்கி களமிறங்கியது. அந்த அணியின் இஷான் கிஷன் 48 ஓட்டங்கள் குவித்தார். அதிரடியாக ஆடிய டிம் டேவிட் 11 பந்தில் 34 ஓட்டங்கள் குவித்தார்.

இறுதியில் மும்பை அணி 19.1 ஓவரில் 5 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து வெற்றி இலக்கான 160 ஓட்டங்களை எடுத்தது. டெல்லி தோல்வியடைந்ததால் 16 புள்ளிகள் பெற்றிருந்த ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 4ஆவது இடத்திற்கு முன்னேறியது. இதனை பெங்களூர் ரசிகர்கள் கொண்டாடி மகிழ்ந்தனர். குஜராத் டைட்டன்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ், லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ், ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் ஆகிய நான்கு அணிகள் ப்ளேஓப் சுற்றுக்கு தகுதிபெற்றன.

நாளை நடைபெறும் இறுதிப்போட்டிக்கான தகுதிப் போட்டியில் குஜராத் டைட்டன்ஸ் மற்றும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்தப் போட்டியில் வெற்றிபெறும் அணி நேரடியாக இறுதிப்போட்டிக்குத் தகுதிபெறும்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# இலங்கை வருகிறது இந்திய மகளிர் அணி

ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 சர்வதேச தொடர்களில் பங்கேற்க இந்திய மகளிர் அணி இலங்கை வருகிறது. இங்கிலாந்தின் பேர்மிங்காமில் பொதுநலவாய விளையாட்டு விழா எதிர்வரும் ஜூலை 28 முதல் ஓகஸ்ட் 8 வரை நடக்கவுள்ளது.



இதில் பங்கேற்கும் இந்திய மகளிர் கிரிக்கெட் அணி, 'ஏ' பிரிவில் அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், பார்படோஸ் அணிகளுடன் இடம்பெற்றுள்ளது. குறித்த பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கு தயாராகும் வகையில் இந்திய மகளிர் அணி இலங்கை மண்ணில் மூன்று ஒருநாள் மற்றும் 3 இருபதுக்கு 20 போட்டிகள்கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது.

இதற்காக எதிர்வரும் ஜூன் 18ஆம் திகதி இந்திய அணி இலங்கை வருகிறது. ஜூன் 23ஆம் திகதி ஒருநாள் சர்வதேச தொடர் ஆரம்பமாகும். ஜூலை 3ஆம் திகதி இருபதுக்கு 20 சர்வதேச தொடர் ஆரம்பமாகும்.

# இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்; சோகக்கதையை தீர்க்குமா பங்களாதேஷ் அணி?




சுற்றுலா இலங்கை அணிக்கும், பங்களாதேஷ் அணிக்கும் இடையிலான இரு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான போட்டி இன்று இலங்கை நேரப்படி காலை 9.30 மணிக்கு மிர்பூரில் ஆரம்பமாகிறது.

ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இலங்கை அணி பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. முன்னதாக நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவுக்கு வந்தது. குறித்த முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி போராடியே போட்டியை சமநிலைப்படுத்தியது.

இவ்வாறான நிலையிலேயே இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகிறது. இந்தப் போட்டியில் பங்களாதேஷ் அணி வெற்றிபெற்றால் அது மிகப்பெரிய சாதனையாக அமையும். கடந்த 2001ஆம் ஆண்டிலிருந்து 2021ஆம் ஆண்டு வரையில் இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் 10 தொடர்கள் நடைபெற்றுள்ளன. இதில் இலங்கை அணி 9 தொடர்களை வென்றுள்ள நிலையில், 2017ஆம் ஆண்டு ஒரு தொடர் 1-1 என்ற அடிப்படையில் சமநிலையில் நிறைவடைந்தது.

கடந்த 21 வருடங்களாக பங்களாதேஷ் அணி டெஸ்ட் தொடரில் விளையாடிவரும் நிலையில், இதுவரையில் ஒரு தொடரைக்கூட கைப்பற்றவில்லை என்பது பங்களாதேஷ் அணிக்கு சோதக்கதையாகும். அந்த சோகக்கதையை தீர்க்குமா பங்களாதேஷ் அணி ?

# வலயக் கல்வி அலுவலக மட்ட கிரிக்கெட் போட்டியில் நிந்தவூர் அல்–அஷ்றக் சம்பியன்

**(எம்.எஸ்.எம். ஸாகிர்)**

வலயக் கல்வி அலுவலக மட்ட ரீதியாக நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் 20 வயதுப் பிரிவில் நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலை சம்பியனாக வெற்றிவாகை சூடியது.

இம் மென்பந்து கிரிக்கெட் போட்டியின் முதலாவது போட்டி நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலைக்கும், காரைதீவு விபுலானந்தா வித்தியாலயத்திக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்றது. 56 என்ற இலக்கை எதிர்த்தாடிய பத்திமா கல்லூரி அணி 5 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 33 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. போட்டியின் சிறந்த ஆட்டநாயகனாக றூஸான் தெரிவானார்.

இறுதிப்போட்டியில் நிந்தவுர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை மற்றும் அல்-மதீனா தேசிய பாடசாலை அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலை அணியினர் 67 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நிந்தவூர் அல்-மதீனா



நிந்தவுர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலை அணியினர் 4.1 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து முதலாவது போட்டியில் வெற்றிபெற்றனர். போட்டியின் ஆட்டநாயகனாக உபத் தெரிவானார்.

அதனைத் தொடர்ந்து அரையிறுதி ஆட்டம் நிந்தவுர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலைக்கும், கல்முனை பத்திமா கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நிந்தவுர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலை அணியினர் 5 ஓவர்களில் 49 ஓட்டங்களைப் பெற்றனர். இலக்கை எதிர்த்தாடிய கல்முனை தேசிய பாடசாலை அணியினர் 4.1 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 23 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர். இப்போட்டியின் சிறந்த ஆட்டநாயகனாக வாபிர் தெரிவானார்.

இம் மாணவர்களை பயிற்றுவித்த பொறுப்பாசிரியர் எம்.எஸ்.சாபீர், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் இன்பாத் மௌலானா ஆகியோருக்கு பாடசாலை சமூகம் ரீதியாக வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாக கல்லூரியின் அதிபர் ஏ. அப்துல் கபூர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# நற்பிட்டிமுனை ஆர்.கே.ஆர். கிண்ணத்தை கைப்பற்றிய பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம்

**(மாளிகைக்காடு நிருபர்)**




அம்பாறை மாவட்டத்தின் பலம் வாய்ந்த 32 அணிகள் பங்குபற்றிய அணிக்கு 9 பேர் 5 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம் சம்மாந்துறை அல்-ஹூதா விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை தனதாக்கிக்கொண்டது

நற்பிட்டிமுனை ஆர்.கே.ஆர். விளையாட்டுக் கழக ஏற்பாட்டில் நற்பிட்டிமுனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆர்.கே.ஆர். கிண்ண சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் சம்மாந்துறை அல்-ஹூதா விளையாட்டுக் கழகம் மற்றும் சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம் ஆகிய அணிகள் மோதின.



நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற விளாஸ்டர் விளையாட்டுக் கழகம் முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்தது. அதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அல்-ஹூதா விளையாட்டுக் கழகம் 40 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. 41 எனும் வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம் 4.2 ஓவர்களில் வெற்றியிலக்கை அடைந்தது.

இந்த சுற்றுத்தொடரின் நாயகனாக பிளாஸ்டர் விளையாட்டுக் கழக அணித்தலைவர் ஏ.என்.எம்.ஆபாக் தெரிவுசெய்யப்பட்டதுடன், இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக பிளாஸ்டர் விளையாட்டுக் கழக சிரேஷ்ட வீரர் எம்.ஜே.எம். தாஜுதீன் தெரிவுசெய்யப்பட்டார். சம்பியன் பட்டத்தை வென்ற சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டுக் கழகம் ரூ.15 ஆயிரம் பணப்பரிசையும், வெற்றி கேடயத்தையும், இரண்டாம் இடம்பெற்ற அல்-ஹூதா விளையாட்டுக் கழகம் ரூ. 7 ஆயிரம் பணப்பரிசையும் வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுக்கொண்டன.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7